# மாலெ தீப்பொறி

MALAE THEEPORI

CPIML LIBERATION

2023 மே 1-15 தொகுதி 21 இதழ் 18

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200






## தோழர் சிங்காரவேலர் வழி நடப்போம்!
## கார்ப்பரேட்-காவிப் பாசிசத்தைத் தோற்கடிப்போம்!!

# கார்ப்பரேட்டுகளுக்கு நீர்நிலைகளைத் தாரைவார்க்கும் சட்டத்தை முறியடிப்போம்!

பரந்தூர் விமான நிலையம், காட்டுப்பள்ளி துறைமுகம், எட்டுவழிச்சாலை, என்எல்சி சுரங்கங்கள், சிப்காட் தொழிற்சாலை வளாகங்கள் எனத் தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் முயற்சிகளானது வலுவான மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களை எதிர்கொண்டு வருகின்றன.

இந்தப் பின்னணியில், கடந்த ஏப்ரல் 21, 2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில், தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்பு திட்டங்களுக்கான) சட்டம் 2023 TamilNadu Land Consolidation (for Special Projects) Act 2023 என்ற விவசாயிகள் விரோத, சுற்றுச்சூழல் விரோத ஆபத்தான ஒரு மசோதாவை வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தாக்கல் செய்தார்; சட்டமன்றத்தில் விவாதங்கள் இல்லாமலேயே அது சட்டமாகவும் ஆகியுள்ளது!

ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகள், நீரோடைகள், வாய்க்கால்கள் அமைந்துள்ள 100 ஏக்கருக்கு குறைவான நிலங்களை, சிறப்புத் திட்டங்களுக்கு என்ற பெயரில், தொழிற்சாலைகள், வணிகம், உள்கட்டமைப்பு போன்ற பல்வேறு தேவைகளுக்கு வழங்கலாம் . 'இத்தகைய நிலங்களை வாங்குவதில் / கையகப்படுத்துவதில் சட்டரீதியான விதிமுறைகள், ஆட்சேபணைகள் இல்லை' என்று இச் சட்டம் சொல்கிறது. இது கடந்த மூன்றாண்டு களாக மத்திய பாஜக அரசால் பரிந்துரைக்கப்பட்டு வந்த சட்டமாகும். கார்ப்பரேட் பெரு நிறுவனங்க ளுக்கு நிலங்களைத் தாரைவார்க்க, தடையின்றி அந்நிய நிறுவன முதலீடுகளைப் பெற, இத்தகைய சட்டம் வழிவகை செய்கிறது. தமிழ்நாட்டில் பெரு நிறுவனங்கள், 'சுற்றுச்சூழலை அழிக்கக் கூடிய எந்தவொரு தொழிற்சாலையையும் தங்குதடையற்ற முறையில் கொண்டு வரலாம்' என்ற முழுமையான ஒப்புதலை இந்தச் சட்டம் வழங்குகிறது.

இந்த சட்டம் அமலானால், நீர்வரத்துகள், நீர்நிலைகள் மீது அமைக்கப்படும் பல்வேறு திட்டங்களால் இயற்கை, சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்படும். நீர்நிலைகள் நிரந்தரமாக அழிக்கப்படும்; அப்பகுதியைச் சார்ந்த விவசாயம் கடுமையாக பாதிக்கப்படும். தொழிற் சாலைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், வணிக வளாகங்கள், கட்டுவதற்கு நீர்நிலை நிலங்களை வாங்கும் முதலாளிகள் மற்றும் அரசாங்கம் விருப்பம்போல நீர்நிலைகளை சேதப்படுத்தி விட்டு அந்த நிலங்களைப் பயன்படுத்தலாம். சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நடப்புச் சட்டங்கள் பொருத்தப் பாட்டை இழக்கும். உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரமும் பறிக்கப்படும். கிராமப்புற பகுதியில், எந்தவொரு திட்டம் / ஆலைகள் உள்ளாட்சி மன்ற அனுமதி யில்லாமலேயே நுழையும்.

தொழில் வளர்ச்சிக்காக, ஆறுகள், ஏரிகள், குளங்கள், ஓடைகள், இயற்கை, சுற்றுச்சூழல் என எல்லாவற்றையும் இழக்கலாம் என்ற கார்ப்பரேட் மனப்பான்மையில் திமுக அரசாங்கம் இருப்பதாக தெரிகிறது. ஏற்கனவே பட்டியலிடப்பட்ட சுமார் 65,000 நீர்நிலைகள் இருந்த தமிழ்நாட்டில் தற்போது சுமார் 30,000 நீர்நிலைகள் தான் இருக்கின்றன. அவைகளும் ஆவணங்களில் உள்ள பரப்பளவுகளை இழந்துள்ளன. இப்படி காணாமல் போன நீர்நிலைகள் மீது, தொழிற் சாலைகள், கல்லூரிகள், அடுக்குமாடி குடியிருப்புகள், பெரும் வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள் போன்றவை கட்டப்பட்டு நீர்நிலைகள் அழிக்கப்பட்டு விட்டன; நீராதாரங்கள் ஒழிக்கப்பட்டு விட்டன. நீரோடைகள், வடிகால் கட்டமைப்புகள் அழிக்கப்பட்ட தால், காலநிலை மாற்றத்தால் உருவாகும் பெருமழை மற்றும் பெருவெள்ளங்களால் மாநகரங்கள் மிதக்கும் நிலைக்குச் சென்று விட்டன. இதனால், மாநகர மக்களின் வாழ்க்கை தொடர் பாதிப்புகளைச் சந்தித்து வருகிறது.

வெளிநாட்டு, உள்நாட்டு கார்ப்பரேட் பெருநிறுவ னங்கள் மற்றும் கார்ப்பரேட் ஆதரவு உள்கட்டுமான வசதிகளுக்காக, தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலை அழித்து, விவசாயிகள் மக்கள் வாழ்வாதரங்கள் சூறையாடப்படுவதை நாம் அனுமதிக்க கூடாது. 'ஒரு சுற்றுச்சூழல் பிரச்சினை'யாக மட்டுமே கருதி பொதுச்சமூகம் இதை எளிதாகக் கடந்து சென்று விடக் கூடாது என வேண்டுகோள் விடுக்கிறோம். இது தமிழ்நாட்டின் விவசாயம் மற்றும் வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சினையாகும். கார்ப்பரேட் திட்டங்களுக்கு தமிழ்நாட்டின் நீர்நிலைகளைத் தாரைவார்க்கும் தமிழ்நாடு அரசாங்கத்தின், தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்பு திட்டங்களுக்கான) சட்டம் 2023 சட்டம் திரும்பப் பெறப்பட வேண்டும் எனக் கோருகிறோம்.

**அகில இந்திய விவசாயிகள் மகாசபை,** AIKM
**தமிழ்நாடு**

2023 மே 1-15

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 21 இதழ் 18

## உள்ளே


| | |
|---|---|
| பாசிஸ்டுகளுக்கு பதிலடியை கர்நாடகா வழங்கட்டும் | 4 |
| வேங்கைவயல் எழுப்பும் கேள்விகள் | 6 |
| ஏஐசிசிடியு தேசியத் தலைவர் பேட்டி | 8 |
| சவுராஷ்டிரா தமிழ்ச் சங்கமம் | 9 |
| வரலாற்றில் தடம் பதித்த 11ஆவது காங்கிரஸ் | 11 |
| குற்றவாளிகளின் புகழிடம் பாஜக | 14 |
| கல்வியின் பெயரால் காவிப் பரப்புரை | 16 |


**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**

**பழ.ஆசைத்தம்பி**

**அ.சந்திரமோகன்**

**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி : 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com



**தலையங்கம்**

# ஒரு கோடி ரூபாய் உதவிடுமா?

சமீபத்தில் தூத்துக்குடி மாவட்டம், முறப்பநாடு அருகேயுள்ள கோவில்பத்து கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் அவருடைய அலுவலகத்தில் வைத்தே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். அதற்கு ஒரே காரணம் அவர் முறப்பநாடு ஆற்றில் நடக்கும் மணற்கொள்ளையைத் தடுத்தார் என்பதுதான். இவர் நேர்மையான அதிகாரி என்று பெயரெடுத்துள்ளார். ஏற்கனவே லூர்து பிரான்சிஸ் ஆதிச்சநல்லூரில் கிராம் நிர்வாக அலுவலராக இருந்தபோது, அவரைக் கொலை செய்வதற்கு முயற்சி செய்துள்ளார்கள் மணல் மாஃபியாக்கள். ராமசுப்பிரமணியன், மாரிமுத்து என இருவர் இந்த கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். இக் கொலைக்கு முக்கிய காரணம் பிரான்சிஸ் மணற்கொள்ளைக்கு எதிராகச் செயல்பட்டதுதான். இந்த ராமசுப்பிரமணியன் மீது பல புகார்களை லூர்து பிரான்சிஸ் இதற்கு முன்பே கொடுத்துள்ளார். ஆனால், ராமசுப்பிரமணியன் வெறும் அம்பு மட்டுமே. அவருக்குப் பின்னால் சக்தி வாய்ந்தவர்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள் இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் மணற்கொள்ளை, சட்டவிரோத கல் குவாரி, கனிம வளக் கொள்ளை என தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு எதிராகச் செயல்படும் சமூக ஆர்வலர்கள், நேர்மையான அரசு அதிகாரிகள், காவல் அதிகாரிகள் தாக்கப்படுகிறார்கள். கொலை செய்யப்படுகிறார்கள். இது தமிழ்நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் சட்டவிரோத கல் குவாரியில் வேலையின் போது 6 பேர் இறந்து போனார்கள். அதைத் தொடர்ந்து கொஞ்ச நாட்கள் குவாரிகள் மூடப்பட்டன. இப்போது மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் மீண்டும் குவாரிகளில் வேலைகள் நடக்கின்றன. இவற்றில் பெரும்பாலும் சட்டவிரோதமாகவே செயல்படுகின்றன. இவற்றிற்கு சபை நடுவே இருப்பவரின் ஆசியும் உள்ளது எனப் பேசிக் கொள்கிறார்கள் மக்கள். நெல்லை மாநகரத்தில் மையமாக உள்ள சந்திப்பு பேருந்து நிலையத்தைப் புதுப்பிப்பதாகச் சொல்லி அங்கிருந்து கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மணலை வெளி நாட்டில் விற்றுவிட்டார்கள் முந்தைய ஆட்சியாளர்கள். தமிழ்நாட்டில் அதிமுக என்றாலும் சரி திமுக என்றாலும் சரி மணற் கொள்ளை, கனிம வளக் கொள்ளை மட்டும் காட்சி மாறாமல் நடந்து கொண்டிருக்கின்றன. வள்ளியூரில் சமூக ஆர்வலர் ஒருவர் கொல்லப்பட்டார். வேலூரில் ஆற்று மணல் கொள்ளையை தடுக்கச் சென்ற காவலர் கனகராஜ் டிராக்டர் ஏற்றி கொலை செய்யப்பட்டார். இவ்வாறு கொள்ளையைத் தடுக்க நினைப்பவர்கள் கொலை செய்யப்பட்டால், அதைத் தடுக்க யார் முன் வருவார்கள்? அவ்வாறு வரக் கூடாது என்று அச்சுறுத்தும் வகையில்தான் இந்தக் கொலைகளை அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆசியோடு நடத்துகிறார்கள். லூர்து பிரான்சிஸ் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை தனக்கு ஸ்ரீவைகுண்டம் தாலுகாவில் இருந்து தூத்துகுடி தாலுகாவிற்கு இடமாற்றம் கேட்டுள்ளார். கொடுக்கப்படவில்லை.மணற்கொள்ளையர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டவர் முறப்பநாடு காவல் ஆய்வாளர். அவர், மணற்கொள்ளையர்கள் மீது லூர்து பிரான்சிஸ் கொடுத்த புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அவரே, லூர்து பிரான்சிஸ் கொலைக்கும் விசாரணை அதிகாரியா? என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பிய பின்னர் விசாரணை அதிகாரி மாற்றப்பட்டுள்ளார். முதலமைச்சர் லூர்து குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை என்றும் ஒரு கோடி ரூபாய் நிதியுதவியும் அறிவித்துள்ளார். மணற்கொள்ளையை முற்றிலுமாகத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளாமல், இதுபோன்று ஒரு கோடி ரூபாய் நிதியுதவி, மற்றொரு லூர்து பிரான்சிஸ் படுகொலையாவதைத் தடுத்திடுமா? இது மணற்கொள்ளையை மறைப்பதற்கான, மறக்க வைப்பதற்கான செயல் ஆகும். நேர்மையாளர்களுக்கு விடப்படும் சவால்களுக்கு அச்சுறுத்தலுக்கு ஆதரவான செயலாகும்.மணற் கொள்ளையை, கனிமவளக் கொள்ளையை, சட்ட விரோத கல்குவாரிகளை, பசுமைக் கொள்ளைகளை தடுத்து நிறுத்த வேண்டும். பல்பிடுங்கிய பல்வீர் சிங்குகள் இதுபோன்ற மாஃபியாக்களுக்கு எதிராக ஒருபோதும் செயல்பட்டதில்லை. அவர்கள் எளியவர்களிடம்தான் தங்கள் பராக்கிரமங்களைக் காட்டுவார்கள். கொள்ளைகள் தடுக்கப்பட்டால்தான் கொலைகளும் தடுக்கப்படும். இல்லையென்றால் ஒரு கோடி நிதியுதவியும் அரசு வேலையும் பொருளற்றுப் போகும். ❑

# பாசிஸ்டுகளுக்கு ஒரு சரியான அடியை கர்நாடகா வழங்கட்டும்

முக்கியத்துவம் வாய்ந்த 2024 நாடாளு மன்றத் தேர்தலுக்கு முன்னதாக, மே 10ஆம் தேதி நடைபெற உள்ள கர்நாடக சட்டமன்றத் தேர்தல் தொடங்கி, இந்த ஆண்டு மேலும் ஆறு சட்ட மன்றத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. கடந்த இரண்டு பத்தாண்டுகளாக, பாசிசப் படை யணியின் தெற்கு நோக்கிய பயணத்திற்கான முக்கிய ஆய்வகமாக கர்நாடகம் உருவாகி யுள்ளது. 2014ல் மத்தியில் மோடி ஆட்சி அரியணை ஏறியதன் மூலம் அதிகாரம் பெற்ற பாசிச சக்திகள், புகழ்பெற்ற பகுத்தறிவு சிந்தனையாளர் எம்.எம்.கல்புர்கி, சமூக ஆர்வலரும் பத்திரிக்கையாளருமான கவுரி லங்கேஷ் ஆகியோரின் படுகொலையின் மூலம் தங்கள் நோக்கத்தை தெளிவாக வெளிப்படுத் தினர். 2018 தேர்தலில் பாஜக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்திருந்தாலும், கர்நாடகாவில் இந்திய தேசிய காங்கிரஸ், மதச்சார்பற்ற ஜனதா தளம் தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைந்தது. ஆனால் மோடி இரண்டாவது முறையாக மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, கட்சி மாறிய எம்எல்ஏக்கள் மூலம் மாநில அரசு கவிழ்க்கப்பட்டு பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் முதலில் பி.எஸ். எடியூரப்பா தலைமையிலான பாஜக ஆட்சியிலும், பின்னர், பசவராஜ் பொம்மை தலைமையிலான ஆட்சியிலும் கட்டுக்கடங்காத ஊழல், தலித்துகள் பழங்குடியினர் மீது அதிகரித்து வரும் கொடுமைகள், முஸ்லிம் களுக்கு எதிராக தங்கு தடையற்ற வெறுப்பும் வன்முறையும் என்பவற்றால் குறிக்கப்படும் மிக மோசமான காலகட்டத்தை கர்நாடகா கண்டு கொண்டிருக்கிறது.

இன்று மோடி அரசாங்கம் ஒவ்வொரு முனையிலும் கடினமான கேள்விகளை எதிர்கொண்டுள்ள நிலையில், வெட்கக்கேடான துன்புறுத்தலுடன் கூடிய திமிர்பிடித்த மௌனம் என்ற ஒரே ஒரு பதில்வினையை மட்டுமே அது வெளிப்படுத்துகிறது. "இனச் சுத்திகரிப்புக்கான அனைத்து அறிகுறிகளையும்" கொண்டிருந்த, 2002 குஜராத் படுகொலையின் கொடூரத்தை பிபிசி காணொளிகள் நமக்கு நினைவூட்டின. மேலும் அவை, இந்தப் படுகொலைக்கு அப்போதைய குஜராத் முதல்வராக இருந்த நரேந்திர மோடி தான் நேரடி பொறுப்பானவர் எனக் கண்டறிந்த பிரிட்டிஷ் தூதரக அறிக்கையைப் பற்றி நமக்குத் தெரிவித்தன. அதற்கு, அந்தக் காணொளிகளைத் திரையிடுதல் அல்லது பகிர்தலுக்குத் தடையும், டெல்லியிலும் மும்பையிலும் உள்ள பிபிசி அலுவலகங்களில் வரிச் சோதனையுமே பதில் வினையாக இருந்தது. ஹிண்டன்பர்க் அறிக்கை அதானியின் மாபெரும் கார்ப்பரேட் மோசடியை அம்பலப்படுத்தியது, இந்த ஊழல் குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழு மூலம் விசாரணை நடத்த வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கோரியது, மோடி-அதானி தொடர்பை ராகுல் காந்தி வெளிச்சம் போட்டுக் காட்டியது, இவற்றிற்கு பதில் சொல்லும் விதமாக பாஜக மக்களவை உறுப்பினர்களால் ஒட்டு மொத்த நாடாளுமன்ற கூட்டத்தொடரும் இடையூறுக்குள் ளானது; ராகுல் காந்தியின் மக்களவை உறுப்பினர் பதவியும் தகுதி நீக்கத்திற்குள்ளானது.

நரேந்திர மோடி தனது தேர்தல் உறுதி மொழிப் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்த பட்டப் படிப்பை அரவிந்த் கெஜ்ரிவால் பார்க்க வேண்டு மென்று கேட்டார். அதனால் டெல்லி முதல்வருக்கு ரூ.25,000 அபராதமும், ஏற்கனவே துணை முதல்வர் மணீஷ் சிசோடியா சிறையில டைக்கப்பட்டுள்ள மதுபான ஊழல் வழக்கில் சிபிஐ விசாரணைக்கு அழைப்பும் பதிலாகக் கிடைத்தது. பிரதமரோ அல்லது அதுபோன்ற உயர் பதவி வகிக்கும் எந்த அரசியல்வாதியோ கட்டாயம் உயர்மட்டக் கல்விப் பட்டங்கள் பெற்றிருக்க வேண்டும் என்று ஆம் ஆத்மி வலியுறுத்துவதை ஒருவர் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. இங்கு பிரச்சினை என்னவென்றால், பிரதமர் எவ்வளவு அதிகம் படித்திருக்கிறார் என்பதல்ல. ஒரு தேர்தல் வேட்பாளராக அவர் தாக்கல் செய்த உறுதி மொழிப் பத்திரத்தின் உண்மைத்தன்மை பற்றி தான். எந்தவொரு பொதுச் சேவையையும் உரிமையையும் பெறுவதற்குத் தங்களுடைய தனிப்பட்ட அடையாள விவரங்களைத் தருமாறு விடாப்பிடியாக பொதுமக்களை கேட்டுக்கும் போது, ஆவணமில்லாத குடிமக்கள் தங்கள் குடியுரிமையையே இழக்க நேரிடும் என்று

அச்சுறுத்தப்படும் போது, தனது அந்தரங்க விசயம் எனக்கூறி தனது கல்லூரிப் பட்டத்தை மறைக்க பிரதமருக்கு நிச்சயமாக எந்த சிறப்பு உரிமையும் கிடையாது. மேலும், செய்தியாளர் சந்திப்பில் அமித்ஷா காட்டிய பிரதமரின் பட்டமானது முற்றிலும் முரண்பாடுகளால் ஆனது என்பதும் அம்பலமாகிவிட்டது.

புல்வாமா படுகொலை நடந்தபோது, 370வது பிரிவு ரத்து செய்யப்பட்டு, மாநில அந்தஸ்தி லிருந்து இறக்கி இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரித்தபோது, 2019இன் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில், ஜம்மு-காஷ்மீர் ஆளுநராக இருந்த சத்யபால் மாலிக், பிரதமரைப் பற்றி எழுப்பியிருக்கும் கேள்விதான் அநேகமாக பெரும் அதிர்வை ஏற்படுத்தக் கூடியதாகும். புல்வாமா படுகொலை மூலம் சிஆர்பிஎஃப்க்கு இழப்பை ஏற்படுத்திய, மிகப்பெரிய பாதுகாப்பு குறைபாட்டிற்கும் உளவுத்துறை தோல்விக்கும் பிரதமர் மீதும், அவரது மூத்த அமைச்சரவை சகாக்கள் மீதும் சத்தியபால் மாலிக் கடுமையாக குற்றம் சுமத்தினார். சிஆர்பிஎஃப் தனது வீரர்களை ஏற்றிச் செல்ல விமானங்களைக் கேட்டது. ஆனால் மோடி அரசாங்கம் அதை நிராகரித்தது. நாற்பது வீரர்களின் உயிரை பலிகொண்ட பெரும் வெடிப்பிற்கு காரணமான வெடிகுண்டு நிரப்பப்பட்ட வாகனம், சிஆர்பிஎஃப் வாகன வரிசையை இடைமறித்ததை தடுத்திருக்கக்கூடிய, சாலைகள் பாதுகாப்புக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. டிஸ்கவரி தொலைக்காட்சி நிறுவனத்தின் கார்பெட் பார்க் படப்பிடிப்பில் பிரதமர் மும்முரமாக இருந்தார். படப்பிடிப்பு முடிந்ததும் ஆளுநரிடம் பேசியபோது, பாதுகாப்பு குறைபாடு குறித்து அமைதி காக்கும்படி பிரதமர் கேட்டுக் கொண்டார் என மாலிக் நேர்காணலில் தெரிவித்தார். அதே 'அமைதியாக இருங்கள்' என்ற செய்தியை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் தெரிவித்தார். ஆர்எஸ்எஸ்சும் பாஜகவும் ஊழலை ஊக்குவிப்பதாக குறிப்பிட்ட குறிப்புகளுடன் மாலிக் தனது நேர்காணல்களில் குற்றம் சாட்டியுள்ளார். நேர்காணல் முடிந்து பல வாரங்கள் ஆகியும், குற்றச்சாட்டுகள் குறித்து இந்த ஆட்சி இன்னும் வாய்மூடி மௌனம் சாதிக்கிறது.

நிர்வாகத்தின் உக்கிரமான ஒருதலைப்பட்ச நடவடிக்கைகளால் அதிகாரம் தொடர்ந்து மையப்படுத்தப்படும் இயக்கப்போக்கு, ஜனநாயகத்தின் அரசியலமைப்பு அடித்தளத்தின் இருத்தலுக்கு நெருக்கடியை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. ஆட்சியை விமர்சிக்கும் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகளை தேச விரோத கும்பல் என்று சட்ட அமைச்சர் வர்ணிப்பது, நீதித்துறைக்கு எதிராக நிர்வாகத் துறை மக்களை தூண்டிவிடுவதன் வெளிப் பாடாகும். நிர்வாகத்துறை அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்துவதை, நீதித்துறை தடுத்து சரிசெய்யும் ஊக்கமளிக்கும் முயற்சிகளின் சில அறிகுறிகளை நாம் சில காலம் முன்பு பார்த்தோம். உதாரணமாக, மத்திய உள்துறை அமைச்சகத்தால் செல்லாமல் ஆக்கப்பட்ட மலையாள தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமத்தை புதுப்பிக்குமாறு உச்ச நீதிமன்றம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. பில்கிஸ் பானு வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப் பட்ட குற்றவாளிகளை விடுவித்த குஜராத் அரசின் நடவடிக்கை குறித்து விளக்கமளிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மே 10, 1857 என்பது, இந்தியாவின் முதல் சுதந்திரப் போரின் தொடக்கத்தைக் குறிக்கிறது. விரிவான இந்து முஸ்லிம் ஒற்றுமையால் சாத்தியமான ஒரு மக்கள் எழுச்சி பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிப் பேரரசின் அடித்தளத்தை அசைத்தது. நூற்று அறுபத்தாறு ஆண்டுகளுக்குப் பிறகு, அதற்கிணையான தீர்க்கமான போரின் நடுவில், நவீன இந்தியா தன்னைக் காண்கிறது. இந்திய மக்களை அடக்கி, அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை மறுத்து, அவர்களின் நிலங்களையும் வளங்களையும் கொள்ளையடிப்பதற்கு வசதியாக இந்துக் களையும் முஸ்லிம்களையும் ஒருவருக்கு மற்றொருவரை போட்டியாளராக முன்னிறுத்திய காலனிய ஆட்சியாளர்களைப் போல இந்தி யாவை ஆள முயலும், பாசிச சக்திகளுக்கு கர்நாடக மக்கள் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும். மே 10, 1857 அந்நிய ஆட்சியில் இருந்து விடுதலை என்ற பதாகையை மேலேற்றி யது. மே 10, 2023 வகுப்புவாத வெறுப்பு, கார்ப்பரேட் கொள்ளை ஆகியவற்றின் கொடிய கலவையிலிருந்து இந்தியாவை விடுவிக்க பாசிசத்திலிருந்து விடுதலை என்ற முழக்கத்தை ஒலிக்கட்டும். ❑

**எம்எல் அப்டேட் தலையங்கம்**
**25 ஏப்ரல் – 1 மே 2023,**

**தமிழாக்கம் – செந்தில்**

# வேங்கைவயல் எழுப்பும் கேள்விகள்

**பாலசுந்தரம்**



வேங்கைவயல் தலித்துகள் குடிக்கும், சமைக்கும் தண்ணீரில் மலம் கலந்த கொடூரச் செயல் வெளி உலகத்துக்கு தெரிய வந்து நான்கு மாதங்களாகி விட்டது. இன்னும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. வேங்கைவயலைச் சுற்றி பல இடங்களில் காவல் சோதனைச் சாவடிகள் உள்ளன. வெளியிலுள்ள வர்கள் வேங்கைவயல் மக்களுடன் கலந்து விடக் கூடாதென்று கவனமாக காவல்துறை சோதனை போட்டுத் தடுக்கிறது. வேங்கைவயல் மக்கள், வெளி உலகத்திலிருந்து துண்டித்து சிறைவைக்கப்பட்டுள்ளனர். இது அரசு செயல்படுத்தும் தீண்டாமை. இது அரசே செய்யும் மனித உரிமை மீறல். வெளியில் உள்ளவர்களால் தான் பிரச்சினை என்று சொன்ன பாஜகவின், 'கண்டுபிடிப்பை' ஆட்சியாளர்கள் செயல்படுத்துவது போல் உள்ளது.

மாவட்ட காவல்துறை விசாரணை, பின் சிபிசிஅய்டி சிறப்பு புலனாய்வு விசாரணை, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி விசாரணை என பல விசாரணை வளையங்களுக்குப் பிறகும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப் படவில்லை. ரத்தப் பரிசோதனை, நவீன டிஎன்ஏ பரிசோதனை என நீள்கிறது. ஆனாலும் அங்கேயே இருக்கும் குற்றவாளிகளை இந்த விசாரணை அமைப்புகள் நெருங்கவில்லை. மலங்கலந்த தண்ணீரால் நிலைகுலைந்து போயிருக்கும் தலித்துகளும் டிஎன்ஏ பரிசோதனைக்கு உட்படுத்தப் படுகிறார்கள். ஏன்? "தங்கள் மலத்தை தாங்களே தண்ணீர் தொட்டியில் கலந்து விட்டனர்" என்று அரசும் காவல்துறையும் சொல்ல திட்டமிடுவது போல் தெரிகிறது. இது வேங்கைவயல் தலித் மக்கள் மீது காவல்துறை நடத்திவரும் மற்றுமொரு அரசு வன்முறை.

காவல்துறை, நீதிமன்றம், அரசு என நவீன சமூகத்தின் மூன்று முக்கிய கரங்கள் ஒன்று சேர்ந்து கூட "மலம் கலந்தவர்களை" கண்டுபிடிக்க முடியவில்லை. கண்டுபிடிக்க முடியவில்லையா? கண்டுபிடிக்க விரும்பவில்லையா? இதுவே, மாபெரும் கேள்வியாக எழுந்து நிற்கிறது. ஏன் கலந்தார்கள்? எதற்காக கலந்தார்கள்? யார் கலந்தார்கள்? என்ற அடிப்படையான கேள்விகளுக்கு அரசு இன்னும் விடை கண்டுபிடிக்கவில்லை. விடை தேடி கண்டுபிடிக்க வேண்டியது அரசின் பொறுப்பு. சமூகத்தின் பிரதிநிதியாக இருப்பதாக கூறிக்கொள்ளும் காவல்துறை, நீதிமன்றம், அரசு ஆகியவைதான் உண்மையை, குற்றவாளிகளை கண்டுபிடித்தாக வேண்டும். நான்காவதாக, ஊடகங்கள். ஊடகங்கள் பெரிதும் அமைதி காக்கின்றன. சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை போல, காவல்துறை, நீதிமன்றம், அரசாங்கம் சொல்வதை திருப்பிச் சொல்வதோடு நின்று கொள்கின்றன. இந்தச் செய்தியைப் பற்றி எழுதுகிறபோது 'தினத்தந்தி' நாளேடு, "அசுத்தம் கலந்த நிகழ்வு" என்றே எழுதுகிறது. இது, 'மலம் கலந்த' செயலின் குரூரத்தை, காட்டுமிராண்டித் தனத்தை மட்டுப்படுத்திக் காட்டுகிற, குற்றத்தின்

தீவிரத்தைக் குறைத்துக் காட்டுகிற செயல். சமூகத்தின் நாகரிக பொதுப்புத்தியில் இந்தக் கொடூரச் செயல் பற்றி கோபங்கொண்டு கேள்வி எழுப்புவதற்கு மாறாக, இது ஒரு சாதாரண செயல்தான் என்பது போன்ற எண்ணத்தை ஏற்படுத்தும் திட்டமிட்ட முயற்சி. பொது சமூகத்தின் எண்ணங்களைத் தவறாக வடிவ மைக்கும் கருத்தியல் பணி. உண்மையைக் கண்ட டைய சமூகத்துக்கு ஒரு கருவியாக இருப்பது தான் ஊடகங்கள். ஆனால், உண்மையைக் காண முடியாமல் செய்வதுதான் 'ஊடக அறமாக, மாறி வருவதன் அடையாளம்தான் தினத்தந்தியின் இந்த சொல்லாடல்.

இந்த வகையில், ஆட்சியாளர்கள், காவல் துறை, நீதிமன்றம் இவற்றோடு ஊடகங்களும் இசைந்து செயல்படுவதாகவே தெரிகிறது. இந்த இசைவின் மீது, இணக்கத்தின் மீது, ஒருமையின் மீது கேள்வி எழுப்பியாக வேண்டும். வேங்கை வயல் மக்கள், சுற்றி வளைக்கப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டுள்ள நிலையில் கேள்விகள் எழுப் பப்பட்டாக வேண்டும்.

வேங்கை வயல் குற்றத்தை சமூகத்திற்கு எதிரான குற்றமாக கருதவேண்டும். அப்படி இல்லாமல், அந்த குற்றத்தைச் செய்தவர்களை பாதுகாப்பதிலிருந்து தொடங்கி, அந்த குற்றத்தையேப் பாதுகாப்பதில் முடிவதற்கு காரணம், பெரும்பான்மை ஆதிக்க சாதி மனநிலை. தலித் விரோத மனநிலை. இவைதான் வேங்கை வயல் குற்றத்திற்கு எதிராக கடுமையாக செயல்படுவதைத் தடுக்கிறது.

மாபெரும் குற்றச்செயல் நடந்து இத்தனை நாட்களுக்குப் பிறகும் அரசாங்கத்தின் தலைவர், முதலமைச்சர் ஸ்டாலின் 'வேங்கை வயல்' என்ற சொல்லைக் கூட உச்சரிக்க வில்லை. சட்டப் பேரவையில் இந்த விஷயம் பற்றி தானே முன் வந்து விவாதிக்க ஆளும் கட்சி முன்வரவில்லை. எதிர்க்கட்சிகள் அதிமுக, பாஜக எழுப்பிடத் தயாரில்லை. திமுகவின் கூட்டணிக் கட்சிகளும் கேள்வி எழுப்பவில்லை. சட்டப்பேரவையும் அமைதியாக இருந்து முடிந்துவிட்டது. ஒரு மிகப்பெரும் சமூகக் குற்றம் பற்றி மக்கள் பிரதிநிதிகள் கொண்ட சட்டப்பேரவை பேசாதது மிகப்பெரிய அநீதி. இதற்குப் பின்னால் இருப்பது வாக்கு வங்கி அரசியல். அதிலும் பெரும் பான்மை சாதி வாக்கு வங்கி அரசியல். முக்கிய அரசியல் கட்சிகள், தலித்துகளை கைவிடு கின்றன. பெரும்பான்மை ஆதிக்க சாதி அரசியலை கைவிடத் தயாரில்லை. கூட்டணி அரசியல் என்ற பேரால் அநீதிக்கு எதிராக அமைதி காப்பதும் தொடர்கிறது. தலித்துகள், பெண்கள், நலிந்த பிரிவினர் மீது இடைவிடாத வன்முறைகள் தொடர்வதற்கு இந்த "நல்லிணக்கம்" தான் காரணம். சமூக நீதி பேசுகிற கட்சிகள், சமூக அநீதிக்கு எதிராக பேசாம லிருப்பது வியப்பளிக்கும் முரண்பாடு.

அண்மையில், முதலமைச்சர் தலைமையில், ஆதிதிராவிட பழங்குடி மக்கள் நலத்திட்ட ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அரசு தரப்பில் இருந்து வேங்கை வயல் பற்றி எந்த குறிப்பும் இல்லை. விடுதலை சிறுத்தைகள் கட்சி மட்டும், வேங்கை வயல் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுமென்று மனு அளித்திருக்கிறது.

இந்த நிலையில்தான், சலனமற்ற குளத்தில் ஒரு கல்லெறிகிற செயலாகத்தான் பொது விசாரணை ஒன்றை நடத்த முன்வந்துள்ளன இடது, முற்போக்கு அமைப்புகள். அரசு, அரசு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் தவறுகிற போது, இடது முற்போக்கு சக்திகள், குடிமைச் சமூகத்தின் சார்பாக உண்மையை வெளிக் கொண்டு வரும் நோக்கில் கேள்வி எழுப்பிட வேண்டும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்), நீதிக்கான மக்கள் இயக்கம், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் ஆகிய அமைப்புகள் ஒரு திறந்தவெளி பொது விசாரணையின் மூலம் கேள்வி எழுப்ப முன்வந்துள்ளன. "வேங்கை வயல் குற்றவாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படாதது ஏன்? என கேள்வி எழுப்புகின்றன. சகல அதிகாரங்களையும் கொண்டு மறைத்த பல உண்மைகளை இதுபோன்ற இடது, ஜனநாயக, முற்போக்கு சக்திகள் தீவிரமாக செயல்பட்டு உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளன. குற்றவாளிகளுக்கு தண்டனையும் தவறாகத் தண்டிக்கப்பட்டவர் களுக்கு நீதியும் பெற்றுத் தந்துள்ளன. மிகச் சமீபத்திய நிகழ்வு, தொழிற் சங்கங்கள், கட்சிகள், பொது சமூகம் ஒன்றுபட்டு செயல்பட்டு "12 மணி நேர வேலை" சட்டத்தில் அரசை பின்னுக்குத் தள்ள முடிந்துள்ளது. அதுபோல, வேங்கை வயல் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த முடியாதா? அந்தக் கொடூர மன, உடல் காயம் பட்ட தலித்துகளுக்கு நீதி பெற்றுத் தரமுடியாதா? இது வேங்கை வயல் தலித்துகளுக்கான நீதி மட்டுமல்ல, சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் ஒட்டுமொத்த தலித் சமூகத்துக்குமான நீதியாகும்.

# போராட்ட மரபும் வரலாறும் பாரம்பரியமும் கொண்ட தமிழகத்தில் தொழிலாளர், விவசாயி விரோத சட்டத் திருத்தங்கள், வரலாறைப் பின்னோக்கி தள்ளுவதாகும்

(சிபிஐஎம்எல் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரும் ஏஐசிசிடியூ அகில இந்தியத் தலைவருமான தோழர் வீ. சங்கர், நாகர்கோயிலில் 25.4.2023 அன்று அளித்த பேட்டி. பேட்டியின் போது சிபிஐஎம்எல் மாநில செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி, கட்டுமான சங்க அகில இந்திய தலைவர் தோழர் சோ.பாலசுப்பிரணியன், மாநிலத் தலைவர் தோழர் சொ.இரணியப்பன், ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் தோழர் த.சங்கரபாண்டியன், மாநில துணைத் தலைவர் தோழர் எஸ்.எம்.அந்தோணிமுத்து ஆகியோர் உடன் இருந்தனர்)

*சமீபத்தில் கூடிய இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்)ன் தமிழ்நாடு மாநிலக் குழு கூட்டம் மோடி அரசின் தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத கொள்கைகளைக் கண்டித்தது.*

*மோடி-பிஜேபியின் வழியில் திமுகவும் செல்லத் துவங்கி விட்டதோ எனும் கேள்வி இப்போது எழுந்து வருகிறது. ஏனென்றால், தமிழக அரசு சமீபத்தில் சுமார் 17 மசோதாக்களை எந்த வித முன்னறிவிப்பும் செய்யாமல், விவாதமே இல்லாமல் நிறைவேற்றி இருக்கிறது. அதில் ஒன்று தொழிலாளர் வேலை நேரத்தை 12 மணி நேரமாக அதிகரிக்கும் சட்டத் திருத்தம். மற்றொன்று, எந்தவித தங்குதடையின்றி கார்ப்பரேட் முதலாளிகள் நிலம் வாங்குவதை, நிலம் ஆக்கிரமிக்கப்படுவதை அனுமதிக்கும் சட்டத் திருத்தம் ஆகும். இது விவசாய வளர்ச்சிக்கும் விவசாயி களுக்கும் எதிரானது ஆகும்.*

*மோடியின் 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் (code) அமலுக்கு வருமுன்பே, புழக்கடை வழியாக அதனை நடைமுறைக்கு கொண்டு வருவதை பிஜேபி ஆளும் மாநில அரசாங்கங்கள் மட்டுமே செய்து வந்துள்ளன.*

*இத்தகைய திருத்தங்களை, மோடியின் 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் (code) அமலுக்கு வருமுன்பே, புழக்கடை வழியாக அதனை நடைமுறைக்கு கொண்டு வருவதை பிஜேபி ஆளும் மாநில அரசாங்கங்கள் மட்டுமே செய்து வந்துள்ளன. பிஜேபி அல்லாத கட்சிகள் ஆட்சியில் இருக்கும் எங்கும் இப்படியொரு திருத்தம் வரவில்லை. இந்தப் பின்னணியில், பிஜேபியை வலுவாக எதிர்க்க உறுதி பூண்டுள்ளதாக சொல்லும் திமுக ஆட்சியில் இத்தகைய திருத்தம் மேற்கொள்வது, திமுகவும் பிஜேபி பாதையிலேயே செல்வதாக முன்வைக்கப்படும் வாதத்திற்கு வலு சேர்ப்பதாக இருக்கிறது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் தொழிற்சங்கம் முதல் முறையாக துவங்கப்பட்டது. தமிழகத்தில் தான் முதல் மே நாள் கொடி ஏற்றப்பட்டது. 8 மணி நேர வேலைக்கான போராட்டத்தை தமிழகத்தில்தான் முதல் முறையாக தோழர் சிங்காரவேலரால் கொண்டாடப்பட்டது. அதற்காக அவர் பிரிட்டிஷ் அரசால் நாடுகடத்தபட்டார் என்பது வரலாறு.*

*அப்படிப்பட்ட போராட்ட மரபும் வரலாறும் பாரம்பரியமும் கொண்ட தமிழகத்தில் மேற்கண்ட திருத்தம் வரலாறைப் பின்னோக்கி தள்ளுவதாகும். எனவே, இந்த தொழிலாளர் விரோத சட்டத் திருத்தங்களை, தொழிலாளர் போராட்டங்கள் காரணமாக, மாநில அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்து இருக்கிறது.*

ஆனாலும், அது போதுமானதல்ல. அதை திமுக அரசு திரும்பப் பெறுகிற வரை, சிபிஐ(எம்எல்) போராடும். அவசியப்பட்டால், சட்டமன்ற முற்றுகை போராட்டம் நடத்தவும் தயங்காது. மே 1மிகப்பெரிய தொழிலாளர் பேரணியை நாகர் கோயில் தலைநகரில் நடத்துவுள்ளோம்.

அதேபோல, நில சட்டத் திருத்தமும் திரும்பப் பெறப்பட வேண்டும் என கோருகிறது.

இதர 15 திருத்தங்கள், சத்தமின்றி நிறை வேற்றப்பட்டதை, மீண்டும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என கோருகிறது.

கர்நாடகாவில் நடைபெற்று வரும் தேர்தலில் மோடி அரசை வீழ்த்துவதற்கான தேர்தல் பரப்புரை இயக்கத்தில் தமிழ்நாடு குழு ஒன்று கலந்து கொள்கிறது. பெங்களூரு கே.ஆர்.புரம் மற்றும் கொப்பல் மாவட்ட கனககிரி ஆகிய தொகுதிகளில் சிபிஐஎம்எல் தனது வேட்பாளர் களை நிறுத்தி உள்ளது.

அகில இந்திய கட்டுமான தொழிலாளர் கூட்டமைப்பின் அகில இந்திய மாநாட்டை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜூலை இரண்டாவது வாரத்தில், ஜூலை 8, 9ல் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு சிபிஐஎம்எல் முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது.

அதே போல, மே மாதத்தில், அனைத்திந்திய விவசாய கிராமப்புறத் தொழிலாளர் சங்கத்தின் பிரச்சாரப் பயணம் சிவகங்கை துவங்கி சென்னை வரை, டெல்டா மாவட்டங்கள் ஊடாக, நடத்தப் பட இருக்கிறது. நூறு நாள் வேலைத் திட்டக் கூலியை நாளுக்கு ரூ 500 என வழங்கிடு, நிதி ஒதுக்கீட்டை அதிகரித்திடு, ஆதார் மற்றும் போட்டோ எடுப்பதை கட்டாய படுத்தாதே உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத் துவதாக அந்த பிரச்சார பயணம் அமையும்.

(குறிப்பு: மே 1 அன்று தமிழ்நாடு அரசு 12 மணி நேர வேலை சட்டத் திருத்த மசோதாவைத் திரும்பப் பெற்றுள்ளது)

## சவுராஷ்டிரா தமிழ்ச் சங்கமம் : வெறுப்பு அரசியலுக்காக, தமிழ்நாட்டு சவுராஷ்டிரா மக்களின் வரலாற்றை திரிக்க முயற்சி

**அ.சந்திரமோகன்**

*தமிழ்நாட்டு சவுராஷ்டிரா மக்களின் பொதுப் புத்தியில், இசுலாமியர் வெறுப்பு அரசியலை திணிப்பதும், அவர்களை தங்களுடைய வாக்கு வங்கியாக மாற்றுவதும்தான் சங்கப் பரிவாரத்தின் நோக்கமாகும்.*

தமிழ்நாட்டு அரசியலில் காலூன்ற பாஜக தீவிரமான முயற்சி களை மேற்கொண்டு வருகிறது; மற்றொருபுறம், ஆர்எஸ்எஸ் பாரத (இந்துத்துவா) கலாச்சாரத்துடன் தமிழ்நாட்டின் பண்பாட்டை இணைக்க காசி தமிழ் சங்கமம், சவுராஷ்டிரா தமிழ் சங்கமம் எனப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. புனித யாத்திரைப் பயணங்களாக தமிழ்நாட்டு மக்களை உத்தரப்பிரதேச மாநிலத்திற்கும், குஜராத்திற்கும் அழைத்துச் செல்வதுடன், இந்துத்துவா கருத்தியலை புகுத்தும் கோயில் பண்பாட்டு நிகழ்ச்சிகளும் கட்டமைக்கப்படுகின்றன.

சமீபத்தில் நிறைவுபெற்ற சவுராஷ்டிரா தமிழ்ச் சங்கமம் விழாவில் பேசிய பிரதமர் மோடி "குஜராத்தில் சோமநாதபுரம் சிவன் கோவில் தாக்கப்பட்ட பொழுது, சவுராஷ்டிரா பகுதியில் இருந்து தப்பியவர்கள், தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தனர். அவர்களைத் தமிழகம் திறந்த மனதுடன் ஏற்றுக்கொண்டது. அவர்கள் புது வாழ்க்கை தொடங்க உதவியது.

ஆனால் அதற்கும் முன்பிருந்தே, குஜராத் தமிழகத்திற்கு இடையே ஆழமான தொடர்புகள் இருந்தன. 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு இருக்க முடியுமா? "

### தமிழ்நாட்டு சவுராஷ்டிரா மக்களின் வரலாறு:

சவுராஷ்டிரா சமூகத்தினர், கி.பி.11ஆம் நூற்றாண்டில் கஜினி முகமதுவால் குஜராத் சோமநாதர் கோவில் தாக்கப்பட்டபோது தப்பித்து தமிழ்நாடு வந்தவர்களா?

வரலாறு தெரிவிப்பது என்னவென்றால், "கி.பி.11ஆம் நூற்றாண்டில் கஜினிமுகமது சோமநாதர் கோயில் மீதான படையெடுப்புக்குப் பிறகு சவுராஷ்டிரியர்கள் தெற்கு குஜராத்திலிருந்து மகாராஷ்டிராவிற்கு புலம் பெயர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை யாதவ மன்னர்கள் ஆட்சியில் சவுராஷ்டிரர்கள் இன்றைய மஹாராஷ்டிராவின் தௌலதாபாத்தில் உள்ள தேவகிரியில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. யாதவ மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, கி.பி.14ஆம் நூற்றாண்டில், கர்நாடகா ஹம்பியைத் தலைநகராகக் கொண்ட விஜயநகரப் பேரரசு விரிவடைந்தது. விஜயநகரப் பேரரசு மன்னர்களின் அழைப்பின் பேரில் சவுராஷ்டிரர்கள் தென்னிந்தியாவிற்குள் வந்தனர்; மன்னர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தி னருக்கு சிறந்த பட்டாடைகள் உற்பத்தி செய்பவர்களாக இருந்தனர். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, கி.பி.16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நாயக்க மன்னர்களால் தஞ்சாவூரிலும் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் மதுரையிலும் குடியமர்த்தப் பட்டனர்.

"தென்னிந்தியாவில் குலங்களும், குடிகளும்" தொகுப்பு நூல்களை வெளியிட்ட எட்கர் தர்ஸ்டன் பட்டு நூல்காரர் என்ற தலைப்பில் இவர்கள் பற்றிய குறிப்புகளை எழுதியுள்ளார். அவர்கள் 'கி.பி.11ஆம் நூற்றாண்டில் குஜராத்தில் நடைபெற்ற அன்னியர் தாக்குதல்கள் காரணமாக வெளியேறியதாக" ஒரு வாய்மொழித் தகவல் களைத் தெரிவித்தாலும், தமிழ்நாட்டுக்கு சவுராஷ்டிரர்களின் வருகை 16ஆம் நூற்றாண்டில் நடந்ததாகவே பல வரலாற்று ஆய்வாளர்களும் தெரிவிக்கின்றனர். சவுராஷ்ட்ரர்களின் சமூக அமைப்புகளும் கூட இக்கூற்றை உறுதி செய் கின்றன.

கஜினி முகம்மது படையெடுப்பால், சில குடும்பங்கள் தென்னிந்தியாவிற்கு வந்திருக்கலாம் அல்லது சத்ரபதி சிவாஜி தென்னிந்தியா மீது படையெடுத்த போது வந்த சில குடும்பங்கள் திரும்பாமல் தமிழ்நாட்டில் தங்கி இருக்கலாம் என தமிழ்நாட்டுக்குள் சவுராஷ்டிரா மக்கள் வருகை பற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப் படுகின்றன. எனினும், வரலாற்று ஆய்வாளர்கள் பலராலும் ஏற்கப்படும் கூற்று என்னவென்றால், சவுராஷ்ட்ரர்கள் மன்னர்களுக்கு பட்டாடைகள் தயாரிப்பவர்களாக (Royal Weavers) இருந்ததால், விஜயநகரப் பேரரசு காலத்தில் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க தமிழ்நாட்டின் மதுரைக்கு கொண்டு வரப்பட்டு இருக்க வேண்டும். இன்றளவும் மதுரை திருமலை நாயக்கர் மகாலைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெருமளவில் சவுராஷ்ட்ரர்கள் வாழ்கின்றனர். பிறகு, கும்பகோணம், சேலம், திருச்சி, திருநெல்வேலி மாவட்ட பகுதிகளுக்கும் குடியமர்த்தப் பட்டனர்.

### வரலாற்றை திரிக்கும் முயற்சி

கி.பி.11ஆம் நூற்றாண்டில், குஜராத்தில் சோமநாதபுரம் சிவன் கோவில் தாக்கப்பட்ட போது சவுராஷ்ட்ரர்கள் வெளியேறியதாக சொல்லப்படுகிறது. ஆனால், 500 ஆண்டுகள் கழிந்த பின்னர், கி.பி.16ஆம் நூற்றாண்டில்தான் அவர்கள் தமிழ்நாடு வந்ததற்கான சான்றுகள் உள்ளன. தமிழ்நாட்டில், கி.பி.11ஆம் நூற்றாண்டில் நிலவிய சோழர்கள் ஆட்சி காலத்திய கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகள் மற்றும் வெளிநாட்டு பயணக் குறிப்புகள் உள்ளிட்ட எவற்றிலும், "மன்னர் குடும்பங்களுக்கு பட்டுத் துணிகளை நெய்து கொடுத்த இந்த பட்டுநூல்காரர்கள்" பற்றிய எந்தக் குறிப்புகளும் காணப்படவில்லை.

தமிழ்நாட்டு சவுராஷ்டிரா மக்களின் பொதுப் புத்தியில், இசுலாமியர் வெறுப்பு அரசியலை திணிப்பதும், அவர்களை தங்களுடைய வாக்கு வங்கியாக மாற்றுவதும்தான் சங்கப் பரிவாரத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் உள்ள சில சாதிகளை, சமூகக் குழுக்களை கொத்துக் கொத்தாக இந்துத்துவா அரசியல் பிடிக்குள் கொண்டு செல்வது பாஜக-ஆர்எஸ்எஸ்-சங்கப் பரிவாரத்தின் திட்டமாகும். அதற்காக, வரலாற்றைத் திரிப்பதை தொடர்ந்து ஆர்எஸ்எஸ் பாஜக செய்து வருகிறது. சவுராஷ்டிரா தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியின் நோக்கமும் அதுவே ஆகும். ❑

# வரலாற்றில் தடம் பதித்த 11ஆவது கட்சிக் காங்கிரஸ்: சொல்லும் செய்தி

அரிந்தம் சென்

**பாசிசத்தைத் தோற்கடிக்க, ஜனநாயகம் காக்க ஒன்றுபடுவோம்!**
**புரட்சிகர கட்சியை ஒருங்கிணைப்போம்! விரிவுபடுத்துவோம்!!**
**மக்களைச் சார்ந்து நின்று தியாகிகள் கனவு கண்ட இந்தியாவைக் கட்டியெழுப்புவோம்!!!**

*இதுதான் இகக(மாலெ)விடுதலையின் 11ஆவது கட்சிக் காங்கிரஸின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த செய்தியும் அரசியல் முழக்கமும் ஆகும். கட்சி அணிகளுக்கும் அனைத்து இடது மற்றும் ஜனநாயக சக்திகளுக்கும் நாடெங்கிலுமுள்ள போராடும் மக்களுக்கும் ஒரு மிகத் தெளிவான அழைப்பாகும். –ஒரு நீண்ட கால புரட்சிகர கண்ணோட்டத்தில் இன்று நாடு சந்தித்துக் கொண்டிருக்கும் மிகவும் அவசரமான அரசியல் பணிகளாக ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாகும்.*

*வளர்ந்து கொண்டிருக்கும் பாசிசத் தாக்குதல்களுக்கும் அதற்குச் சமமாக நடக்கின்ற பரந்த மக்கள் எதிர்ப்புகளுக்குமிடையே அதிமுக்கியத்துவம் வாய்ந்த 2024ன் தேர்தல்களை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கும்போது, முதலாவதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான வெளிப்படையான சவால் என்பது– வேர்க்கால் மட்டங்களில் இருந்தும் அதே வேளை மேலிருந்து கீழ் நோக்கி கிராமங்கள் வரை–இந்த ஆட்சியை வீழ்த்துவதற்கு ஒரு ஒருங்கிணைந்த அரசியல் பரப்புரை மற்றும் பாசிச எதிர்ப்பு சக்திகளுக்கிடையே இயன்றளவில் பரந்த ஒன்றுமையைக் கட்டமைப்பதுமாகும். இந்த மைய அழுத்தமானது, காங்கிரஸின் ஆவணங்களில், விவாதங்களில் மட்டுமல்ல, முதல்முறையாக, மிக வெற்றிகரமாக நடத்தப்பட்ட "ஜனநாயகம் காப்போம், இந்தியாவைக் காப்போம்– கருத்தரங்கத்தில்" முன்னிலைப்படுத்தப் பட்டிருந்தது. கட்சிக் காங்கிரஸ் அரங்கத்திலேயே நடத்தப்பட்ட கருத்தரங்கத்தில், பீகாரின் உயர்மட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்து கொண் டனர். அது தேசிய ஜனநாயக கூட்டணியை ஓரங்கட்டுவதற்கு பீகார் மாதிரியை முன்நிறுத்துவதை உறுதியான வகையில் வெளிப்படுத்தியது. ஆர்வமூட்டும் வகையில் விவாதமானது, காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட சல்மான் குர்ஷித்தைத் தூண்டிவிடும் வகையில் நிதிஷ்குமார், எதிர்க்கட்சிகள் ஓற்றுமை விசயத்தில் காங்கிரஸ் கட்சி பகிரங்கமாகவும் தெளிவாகவும் வெளியே வரவேண்டும் என்று நகைச்சுவையுடன் மறைமுகமாக விமர்சனம் செய்தார். குர்ஷித்தும் அதற்கு ஈடுகொடுத்து நகைச்சுவையுடன் நம்பிக்கைதரும் வகையில் பதிலளித்தார். சில நாட்களுக்குப் பின்னர், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டி கூட்டத்தில் நானா ராய்பூரில், பாஜகவிற்கு எதிரான அனைத்து*

*தேர்தலில் தோற்கடித்து விட்டாலே பாசிசத்திற்கு மரணம்தான் என்று பகட்டாகச் சொல்வது சுய மாயை, இந்திய மக்களை ஏமாற்றுவது என்பதைத் தவிர வேறல்ல.*




கட்சிகளின் ஒற்றுமையின் அவசரத் தேவை பற்றி வெளிப்படையாகவே தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

வரவிருக்கும் மாகாண மற்றும் தேசிய தேர்தல்களுக்கான தேர்தல் கூட்டணிகளைத் தாண்டி ஒரு போர்க்குணமிக்க பாசிச எதிர்ப்பு ஒற்றுமைக்காக இகக(மாலெ) நிற்கிறது. முதலாவது, முக்கியமான தேவை என்பது, அனைத்து வகையான பாசிசத் தாக்குதல், மோசமான தந்திரங்களுக்கு எதிராக பல்வேறு வகையான மக்கள் இயக்கங்களைச் சக்தியூட்டி ஒற்றுமைப்படுத்துவது ஆகும். அதில், நாடாளு மன்றம் தவிர்த்த, பரந்த மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களில் பெரிய அளவில் ஐக்கியப் பட்ட இடதுசாரிக் கட்சிகள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உலகம் முழுவதும் வளர்ந்து கொண்டிருக்கும் பாசிச/ஏதேச்சதிகார அபாயத்திற்கு எதிராக பெரிய அளவில் சர்வதேச ஒற்றுமை என்பது இந்த சூழலில் மிக முக்கியமான தேவையாகும். இந்த பிரதான நோக்கத்திற்காக முழு ஆதரவையும் அளிப்பதாக இந்திய இடதுசாரிக் கட்சித் தலைவர்களும் சர்வதேச விருந்தினர்களும் தங்களின் உற்சாகமான பேச்சுகள் மற்றும் வாழ்த்துச் செய்திகள் மூலம் தெரிவித்தார்கள். இவ்வாறாக, பாசிச எதிர்ப்பு எனும் ஒரு பொது நோக்கத்திற்காக ஒரு திடமான இடதுசாரிக் கூட்ட ணியை கருவாகக் கொண்ட பரந்த எதிர்க்கட்சி களின் ஒற்றுமை மற்றும் சர்வதேச இடதுசாரி-ஜனநாயக ஒருமைப்பாடு- இந்த மூன்றையும் ஒன்றிணைத்த ஒரு பெரிய மேடையாக 11ஆவது கட்சிக் காங்கிரஸ் இருந்தது.

இரண்டாவது (இரண்டாம் நிலை அல்ல) மிக்க, நீடித்த தன்மை கொண்ட பாசிச எதிர்ப்புப் போராட்டம் கொண்ட இந்தச் சூழ்நிலையில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப் படுகிறது. நம்முடைய அரசியலமைப்புச் சட்டப்படியான ஜனநாயகத்தை பாசிச மிருகத்தின் பிடியில் இருந்து காப்பாற்றுவது என்பது அதிமுக்கியமான, அவசரமான இலக் காகும். ஆனால், தேர்தலில் தோற்கடித்து விட்டாலே பாசிசத்திற்கு மரணம்தான் என்று பகட்டாகச் சொல்வது சுய மாயை, இந்திய மக்களை ஏமாற்றுவது என்பதைத் தவிர வேறல்ல. ஆர்எஸ்எஸ் மற்றும் அதன் பரந்து விரிந்த பரிவாரங்களின் உறுதி செய்யப்பட்ட வரலாறானது, அது (தடை செய்யப்பட்டிருந்த போதும்) தலைமறைவில் செழித்து வளர்வதற்கு விரைவாக விரிவடைதற்கு, ஆட்சியில் இருந் தாலும் இல்லாவிட்டாலும் பல்வேறு விதமான குறைபாடுகளையும் இந்திய சமூகத்தில் உள்ளார்ந் துள்ள தவறான பாதைகளையும் பயன்படுத்தி, அதற்குச் சாதகமாக அரசியல் செய்வதற்கு போதுமான அனுபவமும் திறனும் கொண்டுள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இப்போது அதோடு கூடவே இந்திய சமூகத்தில் உள்ள கிட்டத்தட்ட எல்லா நிறுவனங்களையும் அளவற்ற பாசிசமயமாக்கி 2014ல் இருந்து அரசிலும் உள்ளது. எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து 2024ல் மோடி-ஷா ஆட்சியைத் தோற்கடித்தாலும் காவிப் பாசிஸ்டுகள் அதிகாரத்தின் தாழ்வாரங் களில் உடனடியாகவோ அல்லது பின்னரோ பழிவாங்கும் எண்ணத்துடன் திரும்பவும் வந்து அமர்வதற்குப் போதுமான வழிகளை வைத்திருப் பார்கள் என்பது எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதுதான்.

சங்கிகள் முளைத்து வேர் விட்டு கிளை பரப்பிய சமூக நிலத்தை முதற்கட்டமாக

**வேங்கைவயல் பற்றிய பொது விசாரணைக்கு அனுமதி மறுப்பு – கண்டனம்**

*குற்றவாளிகள் யார் என்று சொல்லாதது மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்களையே குற்றவாளியாக்க முயற்சிக்கும் நிலையில்,கேள்வி கேட்கிறார்கள் வேங்கை வயல் மக்கள் என்று ஒரு திறந்தவெளி பொது விசாரணையை இகக(மாலெ), நீதிக்கான மக்கள் இயக்கம், முற்போக்கு பெண்கள் கழகம் சார்பாக புதுக்கோட்டையில் 9.5.2023 அன்று நடத்திட திட்டமிட்டிருந்த நிலையில், காவல்துறை அதற்கு அனுமதி மறுத்துள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.*

முற்றிலும் மாற்றியமைப்பதுதான் முன்கூட்டியே செய்யப்பட வேண்டிய எச்சரிக்கை நடவடிக்கை யாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நாளைய சுதந்திரத்தைப் பற்றி டாக்டர் அம்பேத்கர் தீர்க்க தரிசனமாகச் சொன்னது போல் 'அடிப்படையில் ஜனநாயகமற்ற இந்திய மண்ணில்' நேர்மையான ஜனநாயகத்தை நிறுவ முடியாது. ஆகையால், அரசிலமைப்புச் சட்டத்தில் பொதிந்துள்ள ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, கூட்டாட்சி மற்றும் இதர இலட்சியங்களை மீட்டெடுக்கும் போராட்டமானது பாசிசத்தை தேர்தல்களில் தோற்கடிப்பதினால் மட்டுமே இறுதி வெற்றியை அடையமுடியாது. அது, 'சமூக வாழ்க்கையில் புரட்சிகர மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய அரசாங்கத்தின் வடிவமும் வழிமுறையும்...' என அம்பேத்கர் வரையறுத்தது போல், ஜனநாயகத்தை மறு கட்டமைப்பு செய்ய ஒரு இடைநிறுத்தம்கூட இல்லாமல் முன் செல்ல வேண்டும்.

நேர்மையான, நிலையான மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவதற்கான பொறுப்பை வரலாறு நம் தோள்களில் சுமத்தியுள்ளது. இடது மற்றும் ஜனநாயக சக்திகளின் ஒத்துழைப்புடன் அதை நிறைவேற்ற 11ஆவது கட்சிக் காங்கிரஸ் உறுதியேற்றுள்ளது. அதற்காக, நமது கட்சியை அதிவேகமாக விரிவாக்கம் செய்வது அவசர அவசியமாகும். அதற்குத் தேவையான மனித வளங்கள் ஒவ்வொரு நாளும் எல்லா இடங்களிலும் நடைபெறுகின்ற எதிர்ப்புகளிலும் போராட்டங்களிலும் நம் நாட்டில் காணப்படும் சமூக பொருளாதாரத்திலும் உற்பத்தி செய்யப்ப டுகின்றன. நம்முடைய அமைப்புக் கலாச்சாரத் திலும் வேலை நடையிலும் காணப்படும் குறிப்பிட்ட பெரும் பலவீனங்களைக் களை வதற்கு தீவிரமாக கவனம் செலுத்துவது மட்டுமே ஒரே வழியாகும். பிரதிநிதிகள் அமர்வு அதற்காக அதிக நேரம் எடுத்துக் கொண்டு கவனம் செலுத்தி ஒரு தெளிவான, ஒன்றுபட்ட புரிதலுக்கு வந்தது. அழுத்தம் கொடுக்க வேண்டிய விசயத்தின் முக்கிய அம்சம் என்பது தத்துவம், அரசியல் மற்றும் அமைப்பு ஒருங்கிணைப்பு ஆகியவை ஒன்றோடு ஒன்றிணைந்து செல்லும் விரிவாக்கம். இரண்டுமே சம அளவு முக்கியத்துவம் கொண்டது. கட்சி கட்டுதல் என்கிற ஒற்றைப் பணிக்கு ஒன்றோடு ஒன்று இட்டு நிரப்பக் கூடியது.

இந்தப் பணிகள் எல்லாம் மிகவும் சவா லானவைதான். ஆனால் மக்களைச் சார்ந்து நிற்கும் போது அவற்றை நாம் கண்டிப்பாக சாதிக்க முடியும். நேர்மையான ஜனநாயகம், கூட்டாட்சி, மதச் சார்பற்ற, சோசலிச இந்தியாவைக் கட்டமைக்க மக்களுடைய மகத்தான புரட்சிகர சக்தியை மற்றும் படைப்பாற்றலைக் கண்டு பிடித்து ஆயுதமாக்கிட அவர்களை அரசியல் ரீதியாக ஊக்குவித்திட வேண்டும். சுதந்திரப் போராட்டத்தின் போதும் அதற்குப் பின்னரும் இன்று வரையிலும் இலட்சக்கணக்கான நம் தோழர்கள் போராடி, உயிர்த் தியாகம் செய்த, அவர்கள் கனவு கண்ட ஒரு இந்தியாவை உருவாக்கிட வேண்டும்.

அந்த நாள் வரும்போது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தோழர்களும் நண்பர்களும் சிவப்பாக்கப்பட்ட வயல் வெளிகளில், சாலை களில், வான வீதியில் பூத்துக்குலுங்கும் வண்ணப் பூக்களால், புது வசந்தத்தின் முன்னோடிகளால் வாழ்த்தப்படுவார்கள். கட்சிக் காங்கிரஸ் முடிவுற்ற பின்னர், செம்பூக்களால் கட்டப்பட்ட மாலை போல் காணப்பட்ட அமைப்பாளர்களும் தொண்டர்களும், "செவ் வணக்கம் தோழர்களே! மீண்டும் சந்திப்போம், நாம் வெற்றி பெறுவோம்! புரட்சி ஓங்குக! என்று சொல்லி ஒருவருக்கொருவர் விடைபெற்றுக் கொண்டார்கள். நம்பிக்கை தரும் ஒரு புதிய தெம்புடன், உயர்ந்த அரசியல் தெளிவு மற்றும் ஒற்றுமையுடன் தோழர்கள், புரட்சிகர செய்தியைப் பரப்புவதற்காகவும் அதன்படி செயலாற்றுவதற்காகவும் வி.எம்.நகரிலிருந்து தங்கள் இடங்கள் நோக்கிப் புறப்பட்டார்கள்.

**லிபரேஷன், மார்ச்–ஏப்ரல் 2023**

**தமிழாக்கம் – ஜி.ரமேஷ்**

# குற்றவாளிகளின், மோசடிப் பேர்வழிகளின் புகலிடம் பாஜக

## சங்கரந்தம்பி

**நா**டு முழுவதும் குற்றவாளிகள் ஒருவர் பின் ஒருவராக பாஜகவிற்குப் படையெடுக்கிறார்கள் என்பது ஒரு புறமிருக்க, ஏற்கனவே பாஜகவில் இருப்பவர்கள் மீது பல்வேறு வழக்குகள் உள்ளன. அதுவும் பாலியல் குற்ற வழக்குகளில் முதலிடத்தில் பாஜக உள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் ஆய்வறிக்கை கூறுகிறது. மகள்களைப் பாதுகாப்போம் என்றும் பெண்களுக்கு பாதுகாப்பு கொடுப்போம் என்றும் பேசிக் கொண்டிருக்கும் மோடியின் ஆட்சியில் இந்திய மல்யுத்த வீராங்கனைகளுக்கே பாதுகாப்பு இல்லை.

மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக, பாஜகவின் நாடாளுமன்ற உறுப்பினரும் மல்யுத்தக் கூட்டமைப்பின் தலைவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது மல்யுத்த வீராங்கனைகள் குற்றம் சாட்டி அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டெல்லியில் போராட்டம் நடத்தி வருகிறார்கள். உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த இந்த பிரிஜ் பூஷன் சிங் மீது தற்போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுவும் ஒரு வழக்கு சிறுவர்களுக்கு எதிரான குற்ற வழக்கு. அவரோ, தன்னை மோடியும் அமித்ஷாவும் பாஜக தலைவர் நட்டாவும் பதவி விலகச் சொன்னால்தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வேன் என்று கூறிக் கொண்டிருக்கிறார். கிட்டத் தட்ட ஒரு வார காலத்திற்கும் மேலாக டெல்லி ஜந்தர் மந்தரில் விக்னேஷ் போகத், சங்கீதா போகத், சாக்ஷி மாலிக், பஜ்ரங் புனியா உள்ளிட்ட மல்லயுத்த வீரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இகக(மாலெ) உள்ளிட்ட அனைத்து எதிர்க் கட்சிகளும் அவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றன. ஆனால், மோடியும் அமித் ஷாவும் கண்டு கொள்ளவேயில்லை. குற்றவாளிகளை நடு ரோட்டில் கொல்ல வேண்டும் என்று சொல்லி சட்ட விரோதமாகச் சுட்டுக் கொல்லும் சாமியார் யோகியும்கூட சத்தமில்லாமல் இருக்கிறார்.

கடந்த ஜனவரி மாதமே மல்யுத்த வீரர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக பிரிஜ் பூஷன் மீது புகார் எழுந்தது. அப்போது மல்யுத்த கூட்டமைப்பு அமைதி காத்தது. அதனால் மல்யுத்த வீராங்கனைகள் போராட்டத்தில் குதித்தனர். உடனே மோடி அரசு, குத்துச் சண்டை வீரர் மேரிகோம் தலைமையில் ஒரு விசாரணை ஆணையத்தை அமைத்தது. அந்த விசாரணை ஆணையம் பிரிஜ் பூஷன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கு ஆதாரங்கள் உள்ளதாக அறிக்கை தாக்கல் செய்த பின்னரும் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படாததால் மல்யுத்த வீராங்கனைகள் மீண்டும் போராட்டத்தில் இறங்கினர். பிரிஜ் பூஷன் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் மனு செய்தனர். அதன் பின்னரே டெல்லி காவல் துறை பிரிஜ் பூஷன் மீது எப்ஐஆர் போட்டுள்ளது. ஆனால், குற்றவாளியான பிரிஜ் பூசனைக் கைது செய்யாத டெல்லி காவல்துறை மல்யுத்த வீரர்களுக்கு ஆதரவாகப் போராடிய டெல்லி பல்கலைக் கழக மாணவர்களைக் கைது செய்கிறது. இப்போது வரை பிரிஜ் பூஷன்தான் இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் பொறுப்பில் அமர்ந்து கொண்டிருக்கிறார். அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து அல்ல மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் பொறுப்பில் இருந்து கூட பதவி விலகச் சொல்வதற்கு மோடி–அமித்ஷா–யோகி கூட்டம் தயாராக இல்லை.

பதவியில் உள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் 363 பேர் மீது கிரிமினல் குற்ற வழக்குகள் உள்ளன. அதில் 83 பேர் பாஜகவினர் என்று 2021ல் ஜனநாயக சீர்திருத்தத்திற்கான சங்கம் என்கிற அமைப்பின் அறிக்கை கூறியது. அந்த எண்ணிக்கை இப்போது அதிகரித்துள்ளது. உத்தரப்பிரதேசம் உன்னாவைச் சேர்ந்த குல்திப் சிங் செங்கார், வாரணாசியைச் சேர்ந்த பிரிஜேஷ் சிங், ஜான்பூரைச் சேர்ந்த தனஞ்சை சிங் என உத்தரப் பிரதேச முதல்வர் யோகியின் ஆதரவா

ளர்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

அதேபோல் தமிழ்நாட்டில், கொள்ளையர்களும் கொலைகாரர்களும் பாஜகவில் இணைந்து விட்டால், புனிதர்களாக ஆகி விடுகிறார்கள். கூலிப்படைத் தலைவர் என்று சொல்லக் கூடிய சீர்காழி சத்யா பாஜகவில் இணைந்தார். சேலத்தில் குண்டர் சட்டத்தில் கைதான ரவுடி முரளி பாஜகவில் சேர்ந்தார். அவருக்கு இளைஞர் அணியில் பொறுப்பு கொடுக்கப்பட்டது. வட சென்னையைச் சேர்ந்த கல்வெட்டு ரவி, புளியந்தோப்பு அஞ்சலை, புதுச்சேரி தாதா எழிலரசி என பாஜகவில் சேர்ந்து புனிதர் பட்டம் பெறும் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. புதுச்சேரி முன்னாள் சபாநாயகர் சிவகுமார் கொலை செய்யப்பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளி எழிலரசி. அவர் இப்போது பாஜகவில் இணைந்ததன் மூலம் சமூக சேவகர் ஆகிவிட்டார். கள்ளச்சாராயத்தை ஒழிக்கப் போராடியவர் மாங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயக்குமார். அவரின் படுகொலைக்கு பின்னால் இருப்பவர் பாஜகவின் திருவாரூர் மாவட்டச் செயலாளரான மாணிக்கம். பல குற்றச் செயல்களில் தொடர்புடைய தஞ்சை பாம் பாலாஜி, சீர்காழி ஆனந்த் என பலரும் பாஜகவில் ஐக்கியம். பாஜகவில் சேர்ந்து விட்டால் அவர்களுக்குப் பாதுகாப்பு. மோடி அரசு தன் கையில் உள்ள அமலாக்கத் துறை, சிபிஐ எல்லாவற்றையும் தன் அரசியல் எதிரிகளுக்கு எதிராகப் பயன்படுத்தி அவர்களை பாஜகவின் பிடிக்குள் கொண்டுவரும் யுத்தியைக் கையாண்டு வருகிறது. டெல்லியின் துணை முதல்வர் சிசோடியாவை மதுபான ஊழல் வழக்கில் கைது செய்தது மோடி அரசு. அப்போது கேஜிரிவால் உள்ளிட்ட எல்லா எதிர்க்கட்சிகளும் சொன்னது ஒன்றுதான். சிசோடியா பாஜகவில் சேர்ந்துவிட்டால் அவர் மீதுள்ள உள்ள வழக்கு காணாமல் போய்விடும் என்பதுதான்.

ஆருத்ரா நிதி நிறுவனம் 1 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களிடம் ரூ.2438 கோடி மோசடி செய்துள்ளது. இதில் கைது செய்யப்பட்டுள்ள குற்றவாளி ரூசோவை வழக்கில் இருந்து விடுவிக்க 13 கோடி ரூபாய் ஆர்.கே.சுரேஷ் பெற்றதாகக் கூறியுள்ளார். இந்த ஆர்.கே.சுரேஷ் பாஜகவின் நிர்வாகி. பாஜக தலைவர் அண்ணாமலைக்கு மிகவும் நெருக்கமானவர். இந்த ஆர்.கே.சுரேஷை தேடிக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு காவல்துறை.

ஆர்.கே.சுரேஷ் போன்று அப்பட்டமாக வெளியே தெரியும் படி செயல்படும் மோசடிப் பேர்வழிகள் மட்டுமல்ல, 2014க்கு முன்பு யார் என்றே தெரியாமல் இருந்து, இப்போது உலகப் பணக்காரர்கள் பட்டியலில் இடம் பிடித்துள்ள அதானி வரை பாஜகவின் ஆதரவாளர்கள். இவர்கள் அறிவியல் ரீதியாக, ஆட்சியாளர்களின் ஆதரவோடு மோசடி செய்பவர்கள். அண்மையில் அதானி குழுமத்தின் மோசடியை, அதானிக்கும் மோடிக்குமான உறவைக் கேள்வி கேட்டதால், ராகுல் காந்திக்கு கிடைத்த பரிசு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இழப்பு. அதானியின் நவி மும்பை விமான நிலையத்தின் ரூ.12,770 கோடி கடனை, பாரத ஸ்டேட் வங்கி வராக் கடன் என்று சொல்லி தள்ளுபடி செய்துவிட்டுள்ளது. இப்படி மக்களைக் கொள்ளையடிக்கும், நாட்டு வளங்களைச் சூறையாடும், கொலை, கொள்ளைகளை சாதாரணமாகச் செய்யும் குற்றவாளிகள் அனைவருக்கும் அடைக்கலம் கொடுத்துக் கொண்டிருப்பது பாஜக. இந்தக் குற்றவாளிகள் ஒன்று பாஜகவில் ஐக்கியமாகி இருப்பார்கள் அல்ல பாஜகவின் ஆசியோடு இருக்கும் அதன் ஆதரவாளர்கள்.

பாஜகவின் மகளிர் அணியின் தலைவராக உள்ள வானதி சீனிவாசனிடம் பத்திரிகையாளர் ஒருவர், பாஜகவில் குற்றவாளிகளாகச் சேர்ந்து கொண்டிருக்கிறீர்களே என்று கேட்டதற்கு, எவ்வளவு பேர் எங்கள் கட்சியில் சேர்கிறார்கள் என்று மட்டும் பாருங்கள், அவர்களுடைய பின்னணியை எல்லாம் ஏன் பார்க்கிறீர்கள் என்று பதில் கேள்வி கேட்டார். மல்யுத்த வீராங்கனைகள் போராட்டம் நாடெங்கிலும் அதிர்வுகளை உருவாக்கியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் பாஜகவில் இருந்த பெண் தலைவர்கள் எல்லாம் பாஜகவில் எங்களுக்கு பாதுகாப்பில்லை என்று அக் கட்சியை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் சூழலில், வானதி சீனிவாசன், 'தங்கள் குடும்பத்தில் பாதுகாப்போடு இருப்பதுபோல் பாஜகவில் இருப்பதாக பெண்கள் உணர்கிறார்கள்' என்று கொஞ்சம்கூட கூருணர்வு இல்லாமல் கூறுகிறார். இப்படிப் பட்ட குற்றவாளிகள், மோசடிப் பேர்வழிகளின் புகலிடமாக இருக்கும் ஆர்எஸ்எஸ்-பாஜக அதை மறைக்க, மக்களிடத்தில் இந்து மதவெறியைத் தூண்டிவிட்டு, சாதி ஆதிக்கத்தைத் தூண்டிவிட்டு தன்னை நிலைநிறுத்திக் கொள்ளப் பார்க்கிறது. கர்நாடகாவில் மக்கள் பாஜகவினரை விரட்டியடிப்பதுபோல் நாடெங்கிலும் மக்கள் பாஜகவிற்குப் பதிலடி கொடுப்பார்கள். ❑

# கல்வியின் பெயரால் செய்யப்படும் காவிப் பரப்புரை: என்சிஈஆர்டி பாடப் புத்தகங்கள் மீது விடாப்பிடியான தாக்குதல்கள்

*தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (என்சிஈஆர்டி) அதன் வரலாற்று பாடப்புத்தகத்தின் 'இந்திய வரலாற்றின் கருப்பொருள்கள் பாகம் II' இல் இருந்து 'அரசர்களும் காலங்களும்: முகலாய அரசவைகள்' (16ஆம் 17ஆம் நூற்றாண்டுகள்) என்ற அத்தியாயத்தை நீக்கியுள்ளது. நாம் அறிந்த இந்தியாவின் ஆட்சிப்பகுதியின், கலாச்சாரத்தின் வரைபடத்தை வடிவமைப்பதில் முகலாயர் நிர்வாக ஒருங்கிணைப்பு முக்கியப் பங்காற்றி இருப்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் போது, இந்த நீக்கம் நமக்கு சில அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்துகிறது. முகலாயர் ஆட்சியின் போது 'இஸ்லாமியமயமாக்கல்' நடைபெற்றது என்னும் நீண்டகால பிரிட்டிஷ் காலனிய/இந்துத்துவ பரப்புரை இருந்தபோதிலும், முகலாயர் காலகட்டம், தற்போது 'இந்து' எனப்படுகின்ற, குறிப்பிடத்தக்க பக்தி இயக்கம் மற்றும் பிற கலாச்சார நீரோட்டங்களை வடிவமைத்த, மதங்களுக்கிடையிலான கலப்பு மற்றும் ஒத்திசைவின் ஒரு வளமான பாரம்பரியத்தை பெற்றிருந்தது.*

*என்சிஇஆர்டி பாடத் திட்டத்தின் மீதான இந்தத் தாக்குதலானது விமர்சன நோக்கிலான அறிவை உருவாக்கிய கல்வியளிக்கும் பொதுவெளி மீதான தாக்குதலின் மற்றொரு வெளிப்பாடாகும்.*

*நவம்பர் 2022 இல், அசாமில் நடைபெற்ற கூட்டத்தில், உள்துறை அமைச்சர் அமித் ஷா, 'நமது வரலாற்றை நாம் பெருமையுடன் மாற்றி எழுதுவதை இப்போது யார் தடுக்க முடியும்? இதனை நாம் திருத்தியாக வேண்டும். நமது வரலாற்றை உலகின் முன்பு பெருமையுடன் வைக்கவேண்டும்.' என அறிவித்தார். சமீப காலங்களில் இந்துமுஸ்லிம் ஒற்றுமையை கட்டி எழுப்பும் நோக்கில் மகாத்மா காந்தியின் முயற்சிகள், காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து ராஷ்டிரிய சுயம்சேவக் மீதான தடை, அந்தப் படுகொலையில் நாதுராம் கோட்சேவின் பங்கு, அவரது பிராமணப் பின்னணி இவை அனைத்தும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட 'நிபுணர்களின்' கோபத்தை எதிர்கொண்டன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதேபோல், 11ம் வகுப்பு பாடப்புத்தகத்தில் 'உலக வரலாற்றின் கருப்பொருள்கள்' பாடத்திலிருந்து 'மத்திய இஸ்லாமிய நிலங்கள்', 'கலாச்சாரங்களின் மோதல்', 'தொழில் புரட்சி' போன்ற அத்தியாயங்களும் நீக்கப்பட்டுள்ளன.*

*இந்திய வரலாற்றில் செய்யப்படும் திருத்தங்களை, மற்ற பாடங்களிலும் செய்யப்படும் இது போன்ற மாற்றங்களுடன் இணைத்துப் பார்க்க வேண்டும். 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கான சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் இருந்து தலித் எழுத்தாளர் ஓம் பிரகாஷ் வால்மீகி பற்றிய குறிப்புகள் நீக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்பு 2002 குஜராத் கலவரம் பற்றிய குறிப்புகள் நீக்கப்பட்டன; மக்கள் மீதும், நிறுவனங்களின் மீதும் அவசர நிலை காலத்தின் கொடூரமான தாக்கத்தைக் குறித்த பத்திகள் கைவிடப்பட்டன; நர்மதா பச்சாவ் அந்தோலன், தலித் சிறுத்தைகள், பாரதிய கிசான் யூனியன் போன்றவற்றால் வழிநடத்தப்பட்ட போராட்டங்கள், சமூக இயக்கங்கள் பற்றிய அத்தியாயங்கள் ஆகியவை சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் இருந்து நீக்கப்பட்டன. பாடப்புத்தகங்களை காவிமய மாக்கும் 2014க்குப் பிந்தைய இந்த*

முயற்சிகளில் மூன்று கருப்பொருள்கள் நீக்கப்பட்டுகின்றன அல்லது நீர்த்துப்போக வைக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. முதலாவது, இந்திய வரலாற்றின் ஒரு அங்கமாக முஸ்லிம்களைக் குறிப்பிடுவது, இரண்டாவது, இந்நாட்டின் புகழ்மிக்க சமூகஅரசியல் வெகுமக்கள் இயக்கங் களைக் குறிப்பிடுவது, மூன்றாவது, ஆர்எஸ்எஸ் மற்றும் அவர்களின் கருத்தியலாளர்கள் செய்த அட்டூழியங்கள் என்பனவாகும்.

நீண்ட காலமாகவே ஆர்எஸ்எஸ் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக பள்ளிப் பாடத் திட்டங் களை சீரமைப்பது என்னும் இயக்கப்போக்கு உள்ளது. இந்த மறுசீரமைப்பிற்கு சட்டபூர்வத் தன்மையை வழங்குவதற்குத் தேவையான கொள்கைக் கட்டமைப்பை இப்போது தேசியக் கல்விக் கொள்கை (2020) அவர்களுக்கு வழங்கியுள்ளது. தேசியக் கல்விக் கொள்கை 2020இல் வரையறுக்கப்பட்டுள்ள கற்றல் நோக்கங்களில் ஆர்எஸ்எஸ்-ன் செல்வாக்கு தெளிவாகத் தெரிகிறது. ஆவணத்தில் குறிப்பிடப் படாமல் ஒதுக்கப்பட்டுவிட்டதன் மூலம், அரசமைப்புச் சட்ட உரிமைகளின் முக்கியத் துவத்தை குறைக்கும் வகையில் உருவாக்கப் பட்டுள்ள இந்தக் கல்விக் கொள்கை, 'சங்'கின் சொந்த மதிப்பீடுகள் மற்றும் அரசமைப்புச் சட்ட மதிப்பீடுகளின் விசித்திரமான கலவையாகும். மதிப்பீடுகளின் ஆதாரமாக, பண்டைய இந்திய பாரம்பரியம் பற்றிய குறிப்புகள் நிறைந்த, இஸ்லாம் பற்றிய குறிப்புகள் எதுவுமற்ற இந்த ஆவணம், கல்வியின் முக்கிய நோக்கமாக உரிமைகளுக்கு மாறாக கடமைகள் அறிவுறுத்தப் படுவதை முக்கிய நோக்கமாக வரையறுக்கிறது.

தேசியக் கல்விக் கொள்கை(2020) மற்ற வழிகளிலும் காவிமயமாக்கத்தை எளிதாக்குகிறது.

ஆசிரியர் பயிற்சி, மதிப்பீடு செய்தல், கல்வி வளாகங்களில் பாதுகாப்பு சேவைகள் போன்ற செயல்பாடுகளை தனியார் அமைப்புகளுக்கு ஒப்பந்த சேவைகளாக மாற்ற இது அரசாங்கத்தை ஊக்குவிக்கிறது. கல்வியில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனியார் அமைப்புகளின் பங்கேற்பைக் கட்டுப்படுத்துவதில் தெளிவு இல்லாததால், ஆசிரியர் கல்வி, மதிப்பீடு செய்தல், பிற வளாக சேவைகளில் ஆர்எஸ்எஸ் ஆதரவு அமைப்புகள் அதிகம் பங்கு வகிக்கும் வாய்ப்புகள் உருவாகும் என்ற உண்மையான அச்சம் உள்ளது. கல்வியில் அச்சம், பிரிவினை, கீழ்ப்படிதல் போன்ற சூழலை உருவாக்க இது காவிமயமாக்கப்படும் பாடத்திட்டங்களுடன் இணைந்து செயல்படும். இதன் மூலம் விமர்சன கல்விமுறை, அரசமைப்புச் சட்டத்திற்கு ஆதரவான கல்விமுறை ஆகியவை ஒழித்துகட்டப்படும். இதோடு கூட, பெரும் சிக்கன நடவடிக்கைகள், தொழிற்கல்வி, மறுவடிவமைப்பு செய்யப்பட்ட இந்துத்துவ பாடத்திட்டம் ஆகியவற்றின் வழியாக வழங்கப்படும் மலிவான, இணக்கமான தொழிலாளர் சக்தி மூலம் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் இந்த ஏற்பாட்டில் பெரும் லாபம் ஈட்ட வழிவகை கிடைக்கும். தேசியக் கல்விக் கொள்கையால் கிடைக்கப்போகும் இலாபத்திற்கான (வெளிப்படையான அல்லது மறைக்கப்பட்ட) புதிய வாய்ப்புகளைப் பற்றி குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

என்சிஇஆர்டி பாடத்திட்டத்தின் மீதான தாக்குதல்கள் நமது கவனத்தை கோருகின்றன. ஏனெனில் தற்போதைய பாடப்புத்தகங்கள் முந்தைய பாடப்புத்தகங்களை விடவும் மக்களின் ஜனநாயக மரபுகளையும் அரசமைப்புச் சட்ட உணர்வையும் பிரதிபலிக்கின்றன. இந்த பாடத்திட்ட அடிப்படைக் கட்டமைப்பு 2005 இல் காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கத்தின் போது தயாரிக்கப்பட்டது. ஆனாலும் இந்தப் பாடப்புத்தகங்கள் இந்திய சமூகம் மற்றும் வரலாற்றின் காங்கிரசின் நோக்குநிலை சார்ந்த கதையாடல்களுக்கும் அப்பால் சென்றன. ஒரு உதாரணத்திற்கு, 2005 க்குப் பிந்தைய பள்ளி வரலாற்றுப் பாடத்திட்டம், பிராந்திய வரலாறுகளை கற்பதற்கு அதிக அழுத்தம் கொடுத்தது. சாதிய, பாலின ஒடுக்குமுறையின் வரலாறுகளை அவற்றைக் புரிந்துகொள்ளும் நோக்கில் சிந்திப்பதற்கும், கடந்த காலம் குறித்த தகவல்களின் அதீத சுமைகளுக்குப் பதிலாக, வரலாற்று ரீதியாக சிந்திக்கவும் குழந்தைகளுக்கு கற்பிக்க முயன்றது. இந்த பாடத்திட்ட அடிப்படைக் கட்டமைப்பானது, ஓரளவுக்கே என்றாலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு கல்வியை ஜனநாயகப்படுத்தும் 1970களில் தொடங்கப்பட்ட இயக்கப்போக்கின் விளை பொருளாகும். இது தலித் பகுஜன், பெண்ணியவாத, பழங்குடியின, மார்க்சிய அறிஞர்களின் பல தலைமுறையினரின் நோக்கு நிலையை ஒன்றிணைத்தது. என்சிஇஆர்டி பாடத் திட்டத்தின் மீதான இந்தத் தாக்குதலானது விமர்சன நோக்கிலான அறிவை உருவாக்கிய கல்வியளிக்கும் பொதுவெளி மீதான தாக்குதலின் மற்றொரு வெளிப்பாடாகும். ❑

**எம்எல் அப்டேட் தலையங்கம்**
**18–24 ஏப்ரல் 2023,**

**தமிழாக்கம் – செந்தில்**

பீகார்:

## ஏன் இந்த தேர்ந்தெடுத்த கைதிகளின் விடுதலை? அனைத்துத் தடா கைதிகளையும் விடுதலை செய்க!

14 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் நிறைவடைந்த 27 கைதிகள் விடுதலை செய்யப்பட்ட நிலையில், 22 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ள, அர்வாலைச் சேர்ந்த ஆறு கிராமப்புற ஏழை செயல்வீரர்களான தோழர்கள் ஜகதீஷ் யாதவ், சுராமன் பகத், அரவிந்த் சவுத்ரி, அஜித் சாவ், லக்ஷ்மன் சாவ், ஷியாம் சவுத்ரி ஆகியோரை விடுதலை செய்யாமல் விட்டுவிட்டார்கள்!

2003 ஆம் ஆண்டு தடா சட்டத்தின் கீழ் நீதியின் அப்பட்டமான கேலிக்கூத்தாக தண்டிக்கப்பட்ட பதினான்கு தோழர்களில் எஞ்சியிருப்பவர்கள்தான் இவர்கள். இந்தத் தடா கைதிகளில் தோழர்கள் ஷா சந்த், மதன் சிங், சொஹ்ராய் சௌத்ரி, பாலேஷ்வர் சௌத்ரி, மஹங்கு சௌத்ரி, மாதவ் சௌத்ரி ஆகிய ஆறு பேர் ஏற்கனவே சிறையில் இறந்துவிட்டனர்.

அவர்களில் ஒருவரான தோழர் திரிபுவன் ஷர்மா மட்டும் 2020 இல் உயர்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். மீதமுள்ள கைதிகளை விடுதலை செய்ய எந்த நீதிமன்றத் தடையும் இல்லை. அதன்பிறகும், மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. மேலும் ஒரு தடா கைதி சிறையில் இறந்து விட்டார். இப்போது இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட கைதிகளின் விடுதலை பீகார் சிறைகளில் ஏற்கனவே இரண்டு பத்தாண்டுகளுக்கும் மேலாக தங்கள் வாழ்நாளைக் கழித்து விட்ட, இந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலதிக அநீதியை இழைத்துள்ளது.

கைதிகளை விடுதலை செய்யும் கொள்கை நியாயமாகவும், வெளிப்படையாகவும் இருக்க வேண்டும். அனைத்து தடா கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். பீகாரில் மதுவிலக்கு சட்டத்தின் கீழ் அநியாயமாக அடைத்து வைக்கப்பட்டுள்ள ஒடுக்கப்பட்ட ஏழை மக்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.



டெல்லி ஜந்தர்மந்தரில் போராடிக் கொண்டிருக்கும் மல்யுத்த வீரர்களுக்கு இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் சுசேதா டே உள்ளிட்ட குழுவினர் இகக(மாலெ) சார்பாக ஒருமைப்பாடு தெரிவித்தனர்



மே நாளில் கோவை வெள்ளூரில் ஓட்டுநர்கள் சங்கம் சார்பாக கொடி ஏற்று நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு தோழர் மருது மணி தலைமை தாங்கினார். தோழர் நாராயணன் கலந்து கொண்டு உரையாற்றினார்.



மதுரை காமராஜ் பல்கலைக் கழக எஸ்விஎன் கல்லூரியில் நடக்கும் கல்விக் கட்டணக் கொள்ளையைத் தடுத்து நிறுத்தக் கோரி சென்னை தலைமைச் செயலகத்திற்கு சென்று ஆர்ஒய்ஏ–அய்சா தலைவர்கள் அவசர மனு அளித்தார்கள். இதில் ஆர்ஒய்ஏ மாநிலத் தலைவர் தோழர் சுந்தர்ராஜ், ராஜேஷ்குமார், அய்சா தலைவர்கள் பிரசன்னா, லெனினின் மற்றும் வழக்கறிஞர் அதியமான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நீண்டகாலமாக தமிழக சிறையில் இருக்கும் இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலை செய்யப்பட வேண்டும் நீதிக்கான மக்கள் இயக்கத்தின் கோரிக்கை

*நீண்டகாலமாக தமிழக சிறையில் இருக்கும் இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலையை கோரி பல தலைவர்களின், வேண்டுகோள்களும், பல ஜனநாயக அமைப்புகளின் ஆர்பாட்டங்களும் போராட்டங்களும் நடந்து வருகின்றன.*

*குழந்தையாக இருந்த போது தந்தையைப் பிரிந்தவர்கள், இளம் மனைவியைப் பிரிந்தவர்கள், மகனையும் சகோதரனையும் பிரிந்தவர்கள் என அவர்களின் கண்ணீர்க் கதைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஆண்கள் இல்லாத அந்த வீடுகளில், வாழ்வாதாரத்திற்காக பெண்கள் வேலைக்கும் சென்று, குழந்தைகள் வளர்ப்பையும் செய்து பெண்கள் அவதியுறுகிறார்கள். சமூகத்தின் பார்வையில் தப்பிச் செல்ல முயலும் குறுகிய கலாச்சார வட்டத்திற்குள் இந்த குடும்பங்கள் இத்தனை ஆண்டுகளும் தள்ளப்பட்டுள்ளன என்ற அவலங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.*

*கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 167 பேர் கைது செய்யப்பட்டனர். அதில் 145 பேர் 10ஆண்டுகள், 7 ஆண்டுகள் என சிறை தண்டனை அனுபவித்து விடுதலை அடைந்துள்ளனர். குண்டு வெடிப்பு சம்பவத்தில் 19 பேர் தண்டனை கைதிகளாக சிறையில் உள்ளனர். 18பேர் வெடிகுண்டு இல்லாத வழக்குகளில் சிறையில் உள்ளனர். வெடிகுண்டு வழக்கில் சிறையில் உள்ளவர்களுக்கு எளிதாக பரோல் கிடைக்காது. அவசிய காரணங்களுக்கு உரிய பாதுகாப்புடன் பரோல் கிடைக்கும். அதிகபட்சமாக 27ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் உள்ளனர். ஆண்டுக்கு, 15 நாள் விடுமுறை வழங்கப்படுகிறது. இவர்கள் கோவை, கடலூர், பாளையங்கோட்டை, சென்னை சிறைச்சாலைகளில் உள்ளனர். சிறை கைதிகள் பெரும்பாலானோர் மாரடைப்பு மற்றும் கண் பார்வை குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறை வாழ்க்கையால் மனநலம் பாதிக்கப்படுகிறார்கள்.*

*குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஆயுள் கைதிகளாக உள்ள 19 பேரில் 18 பேர் விடுதலைக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். இந்த வழக்குகள் விசாரணை உச்சநீதிமன்றத்தில் 11ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. குண்டு வெடிப்பு சம்பவத்தில் முக்கிய குற்றவாளியான பாஷா மட்டும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரவில்லை.*

*மற்ற குற்ற வழக்குகளில் தண்டணை பெற்ற கைதிகளை அண்ணா பிறந்த நாள் போன்ற நாட்களில் விடுதலை செய்த தமிழக அரசு, வரும் நாட்களில் கலைஞர், அண்ணா பிறந்த நாட்களில் சிறையில் இருக்கும் இஸ்லாமியர்களை விடுதலை செய்வதை பரிசீலிக்க வேண்டும்.*

*மற்ற கைதிகளுக்கு கிடைக்கும் அடிப்படை மனித உரிமை இவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பது நீதிக்கான மக்கள் இயக்கத்தின் கோரிக்கை.*

**– பெரோஸ்பாபு**

# டாஸ்மாக் தொழிலாளர்கள் வாழ்வும் பாதுகாக்கப்பட வேண்டும்

தமிழ்நாட்டில் டாஸ்மாக் தொழிலாளர்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிபவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதுநாள் வரை பணி வரன்முறை காலமுறை ஊதியம் கிடையாது. அவர்கள் வாங்கும் தொகுப் பூதியத்தில் உயர்வு அளித்தாலும் கூட அவர்கள் வாங்கும் சம்பளம் மிகவும் சொற்பமே. மேற்பார்வையாளர் ரூ.13,750ம், விற்பனையாளர் ரூ.11,600ம், உதவி விற்பனையாளர் ரூ.11,500ம் தான் பெற்றுவருகின்றனர். சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சட்டப்படியான வார விடுமுறை, தேசிய பண்டிகை விடுமுறை, மிகை நேர ஊதியம் போன்ற எதுவும் கிடையாது. டாஸ்மாக் கடைகளில், பார்களில் பணிபுரியும் ஊழியர்க ளுக்கு பணியிடங்களில் பாதுகாப்பற்ற சூழல் தான் நிலவுகின்றது. சமூக விரோதிகளால் ஊழியர்கள் தாக்கப்படுகிறார்கள். சிலர் உயிரிழந்தும் உள்ளார்கள். பல டாஸ்மாக் கடைகள் பாதுகாப்பற்ற நிலையில்தான் உள்ளன. டாஸ்மாக் ஊழியர்களுக்கு பணிச் சுமைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. அரசாங்கம் விற்பனை இலக்கு நிர்ணயிக்கிறது. இப்போது காலி பாட்டில்களை திரும்ப வாங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், ஏற்கனவே இருக்கக்கூடிய வேலைகளோடு காலி பாட்டில்களை வாங்குதல், பணம் கொடுத்தல், கணக்கு வைத்தல் என அதற்குரிய வேலைகளைக் கூடுதலாகப் பார்க்கவேண்டியுள்ளது. இந்த காலி பாட்டில்கள் திரும்பப் பெறுவதால் ஏற்படும் கூடுதல் வேலைக்கு கூடுதல் சம்பளம் கிடையாது. கூடுதல் நேரம் வேலை செய்ய வேண்டியுள்ளது. பணிச் சுமைதான் அதிகரிக்கிறது. அதற்கேற்ப ஊழியர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். சுகாதாரமற்ற காலி பாட்டில்களால் ஊழியர் களுக்கு நோய் தொற்று ஏற்படும் அபாயமும் உள்ளது. டாஸ்மாக் ஊழியர்கள் மீது தாறுமாறாக ஒழுங்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படுகின்றன. டாஸ்மாக் கடைகளோடு உரிமம் இல்லாத மதுக்கூடங்கள் இயங்குகின்றன. இக் கூடங்களில் பிரச்சனைகள் வரும்போது, டாஸ்மாக் ஊழியர்கள் மீதுதான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உரிமம் இல்லாத மதுக் கூடங்களுக்கு ஆட்சியாளர்கள், நிர்வாகங் களின் ஆசிகள் உள்ளதால், பாதிக்கப்படுகின் றவர்கள் டாஸ்மாக் ஊழியர்களே. வேறு வேலை கிடைக்காமல் பட்டப்படிப்பு படித்தவர்கள் கூட டாஸ்மாக்கில் பணிபுரிகிறார்கள். மது விலக்கு முற்றிலும் அமல்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லும் அதேவேளை, டாஸ்மாக்கில் வேலை பார்க்கும் ஊழியர்களும் அவர்கள் குடும்பங்களும் காப்பாற்றப்பட வேண்டும் என்கிற அடிப் படையில், கடந்த மாதம் ஏஐசிசிடியு உள்ளிட்ட டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு சார்பாக தமிழ்நாடு மின்சாரம், ஆயத்தீர்வை மற்றும் மதுவிலக்குத் துறை அமைச்சர் திரு.செந்தில் பாலாஜியைச் சந்தித்து மனு அளிக்கப்பட்டது. இதில் ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் தோழர் சொ.இரணியப்பன், நிர்வாகிகள் சிவா, சைலப்பன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அமைச்சரைச் சந்தித்த பின்னர், சட்டமன்றத்தில் சில அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும் அறிவிப்புகள், கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்பட முழுமையான வேண்டும்.

–சொ.இரணியப்பன்



# இந்தியாவின் 100ஆவது மே நாள்

தோழர் சிங்காரவேலரால் 1923 மே 1 அன்று சென்னை மெரினா கடற்கரையில் இந்தியாவின் முதல் மே நாள் கொடி ஏற்றப்பட்டது. 2023 மே 1 இந்தியாவின் 100ஆவது மே நாள். இந்த மே நாளில் கார்ப்பரேட் ஆதரவு காவிப் பாசிசத்தை இந்தியாவை விட்டே வெளியேற்றும் இலட்சியத் தோடு இகக(மாலெ), ஏஐசிசிடியு சார்பாகமே 1 அன்று நாடெங்கும் பேரணிகள், பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கொடியேற்றுதல், உறுதியேற்புக் கூட்டங்கள் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரியில் மே 1 அன்று மாலை பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றன. நிகழ்ச்சிக்கு ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் தோழர் சொ.இரணியப்பன் தலைமை தாங்கினார். ஏஐசிசிடியு அகில இந்தியத் தலைவரும் இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினருமான தோழர் வீ.சங்கர் சிறப்புரையாற்றினார். இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் பாலசுந்தரம், கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் தோழர் கிருஷ்ணவேணி, அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க தேசியக்குழு உறுப்பினர் தோழர் அதியமான் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

தென்காசியில் மே1 அன்று நடைபெற்ற பேரணியில் இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் தோழர் ஐயப்பன், ஏஐசிசிடியு மாவட்டச் செயலாளர் தோழர் வேல்முருகன், அயூப்கான், சேக் மைதீன் உள்ளிட்ட உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலியில் மே 1 அன்று மாலை நடைபெற்ற பேரணியை இகக(மாலெ) நெல்லை மாவட்டச் செயலாளர் துவக்கி வைத்து உரையாற்றினார். ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் தோழர் த.சங்கரபாண்டியன், மாநிலத் துணைத் தலைவர் தோழர் ஜி.ரமேஷ் சிறப்புரையாற்றினர். பேரணிக்கு ஏஐசிசிடியு மாவட்டச் செயலாளர் தோழர் க.கணேசன் தலைமை தாங்கினார்.

திண்டுக்கல்லில் மே 1 காலையில் நடைபெற்ற பேரணிக்கு இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் தோழர் சுப்புராமன் தலைமை




புதுச்சேரி



திருவள்ளூர்



தேனி



நாமக்கல்

தாங்கினார். ஏஐசிசிடியு மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் க.ஞானதேசின் சிறப்புரை யாற்றினார். இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர் தோழர் பொன்னுதுரை உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

கரூரில் மே 1 அன்று மாலை நடைபெற்ற பேரணிக்கு ஏஐசிசிடியு மின்வாரிய ஜனநாயக பொதுத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் பால்ராஜ் தலைமை தாங்கினார். இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் தோழர் இராமச்சந்திரன் துவக்கி வைத்தார். ஏஐசிசிடியு மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் ஞானதேசிகன் சிறப்புரையாற்றினார். அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக தேசியக்குழு உறுப்பினர் பிலோமினா உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

சேலத்தில் நடைபெற்ற பேரணிக்கு தோழர் ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் தோழர் வேல்முருகன் தலைமை தாங்கினார். பேரணியின் முடிவில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் அ.சந்திரமோகன் சிறப்புரையாற்றினார். தோழர் மோகன சுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாகர்கோயிலில் நடைபெற்ற கோரிக்கை ஆர்ப்பாட்டத்திற்கு இகக(மாலெ) மாநகரச் செயலாளர் தோழர் ஐயப்பன் தலைமை தாங்கினார். ஏஐசிசிடியு மாநிலத் துணைத் தலைவர் தோழர் எஸ்.எம். அந்தோணிமுத்து சிறப்புரையாற்றினார். ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் தோழர் சுசீலா இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர் கார்மல் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறையில் பேரணி நடைபெற்றது. பேரணியில் இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் தோழர் குணசேகரன் சிறப்புரையாற்றினார். தஞ்சாவூரில் நடைபெற்ற கொடியேற்று நிகழ்ச்சிக்கு ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் தோழர் ராஜன் தலைமை தாங்கினார். திருப்பூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருச்சி மணப்பாறை, கோவை, நாமக்கல், மதுரை, தூத்துக்குடி உள்ளிட்ட அனைத்து மாவட்டங் களிலும் பல்வேறு தொழிற்சங்கங்களின் கொடியும் அலுவலகங்களில் கட்சிக் கொடியும் ஏற்றப்பட்டன.



கும்பகோணம்



தஞ்சை



மயிலாடுதுறை




தூத்துக்குடி




தர்மபுரி




கரூர்



நெல்லையில் புதிதாக இணைந்த சுமைப்பணி தொழிலாளர்கள்



கந்தர்வகோட்டையில் மே நாள் உறுதியேற்பு



கள்ளக்குறிச்சியில் சாலை வசதி கோரி நாற்று நடும் போராட்டம்



மணப்பாறையில் கட்சி துவக்க நாள் உறுதியேற்பு




வண்டலூரில் லெனின் பிறந்தநாள் கருத்தியல் அரங்கம்



கச்சைகட்டியில் வீட்டு மனை கோரி முற்றுகை

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.05.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# இந்திய 100ஆவது மே நாள்





















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh